பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 15, வியாழக்கிழமை 31.08.2017 கதிர் 298

## யாழ்.நகரில் ஒரே நாளில் 25 பேரைக் கடித்த நாய்!

எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்.நகரத்தை அண்டிய பகுதியில் கறுப்பு நிற நாய் ஒன்று நேற்றுமுன்தினம் மதியம் முதல் நேற்றுப் பிற்பகல் வரை சுமார் இருபத்தைந்து பொதுமக்களைக் கடித்திருப்பதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்தடுத்து இந்த நாய் பக்கம் 18

# மஹிந்த - சம்பந்தன் மந்திராலோசனை!

பிரத்தியேக செய்தி



## புதிய அரசமைப்புக் குறித்து விரிவான கருத்துப் பகிர்வு

கொழும்பு, ஓகஸ்ட் 31

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் சத்தம் சந்தடியின்றி சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருக்கின்றது.

தனித்து இருவரும் சுமார் 45 நிமிட நேரம் மனம் விட்டுப் பேசியிருக்கின்றனர். புதிய அரசமைப்பு உருவாக்கம் உட்பட தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து அவர்கள் மந்திராலோசனை நடத்தியிருக்கின்றனர் எனத் தெரியவந்தது.

பக்கம் 18



ஜனாதிபதி தெரிவிப்பு

## தேசிய அரசுதான் ஒரே சாத்தியம்!

### 2020வரை இந்த ஆட்சி தொடருமாம்

கொழும்பு,ஓக.31

"தற்போதைய நாடாளுமன்றத்தில்எந்தக்கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய வாய்ப்பே இல்லை. தேசிய அரசுதான் ஒரே சாத்தியம்."

–இவ்வாறு தெளிவாகக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்று முற்பகல் கொழும்புக் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடக நிறுவனத் தலைவர்களைச் சந்தித்த பக்கம் 18

## புலிகளின் இலட்சினையுடன் வவுனியாவில் துண்டுப்பிரசுரம்

வவுனியா, ஓக.31

வவுனியா நகரில் நேற்று இரவு தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை என்று குறிப்பிடப்பட்டு புலிகளின் இலச்சினையோடு துண்டுப்பிரசுரங்கள் சில வெளியிடப்பட்டுள்ளன.




வவுனியா, குருமண்காடுபிரதேசத்தின் ரெலோ கட்சிக் காரியாலயத்துக்கு அருகில் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் வீசிச் செல்லப்பட்டுள்ளன.

சுவரில் ஒட்டப்பட்டும், வீதியோரங் பக்கம் 18

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்

## இலங்கை அரசின் மீது சர்வதேச நெருக்குதல்: கோருகிறார் முதல்வர்!

யாழ்ப்பாணம், ஓக.31

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நாடுகள் இலங்கைக்குஅழுத்தம்கொடுக்க வேண்டும்.

–இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்கோரியிருக்கின்றார்.

காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை பக்கம் 18

## தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் அமெ.அதிகாரியுடன் நாளை பேச்சு!



கொழும்பு, ஓக.31

இலங்கைக்கு வந்திருக்கும் அமெரிக்காவின் தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பதில் இராஜாங்கச் செயலாளர் அலிஸ் வேல்ஸ் அம்மையாரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் நாளை பக்கம் 18

## உள்நாட்டில் நம்பிக்கை இழந்ததால்தான் வெளிநாட்டில் வழக்குப் போடும் நிலைமை

### ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய விவகாரம் குறித்து சுமந்திரன் கருத்து

கொழும்பு, ஓக.31

"பொறுப்புக்கூறல்விவகாரம் தொடர்பில் உள்நாட்டில் நீதி நியாயம் கிடைப்பதில் நம்பிக்கையின்மை ஏற்பட்டதால்தான் நமது மக்கள் வெளிநாடுகளில் வழக்குப்போடும்நிலைமை வந்திருக்கின்றது"

–இவ்வாறு கருத்து வெளியிட்டார்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ.சுமந்திரன்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் வன்னித் தளபதியாக இருந்தவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, தற்போது பிரேஸில் மற்றும் அதைச் சூழ்ந்த நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராக உள்ளார். அவருக்கு எதிராக சித்திரவதை மற்றும் பக்கம் 18

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கியமையை ஆட்சேபித்து

## முதல்வருக்கு எதிராக டெனீஸ் வழக்கு!

### மேன்முறையீட்டு நீதிமன்றில் தடையீட்டு எழுத்தாணை மனு

கொழும்பு, ஓக.31

தம்மை வடமாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிய முறைமை தவறு எனத் தெரிவித்து பா.டெனீஸ்வரன் நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தடையீட்டு எழுத்தாணை மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

தம்மை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றியமைக்கு எதிராக உடனடியாக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்படியும் –

உரிய விசாரணையின் பின்னர் அவ்வாறு வெளியேற்ற விடுத்த உத்தரவும் முறைமையும் தவறானவை என்று பிரகடனப் படுத்தும்படியும் வடக்கு மாகாணக் கடற்றொழில், போக்குவரத்து அமைச்சராகவிருந்த டெனீஸ்வரன் இந்த மனுவில் கோரியுள்ளார். பக்கம் 18



சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று, காணாமற்போனோரின் உறவினர்கள் யாழ்.நகரில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (படம் – எஸ்.நிதர்சன்)

# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்; மட்டக்களப்பில் கவனவீர்ப்பு போராட்டம்!

மட்டக்களப்பு, ஒக. 31

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தின் பிரதான நிகழ்வாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று மட்டக்களப்பில் நடைபெற்றுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்புகளின் ஒன்றியம், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையம் உட்படப் பல்வேறு அமைப்புகள் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக ஒன்று கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இனியும் வேண்டாம் ‘இந்த துயரம்’ என்னும் தலைப்பில் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

அத்துடன், அபரிக்கப்பட்டு மறைக்கப்பட்டுள்ள எமது உறவுகளை வெளிக்கொண்டு வர, அவர்களின் நிலைமையை அறிய வெளிப்படையான சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்போது காணாமல்ஆக்கப்பட்டவர்கள் மீண்டும் குடும்பத்துடன் இணைய வேண்டும் என வலியுறுத்தி தீபங்கள் ஏற்றி வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்களை உதாசீனம் செய்து சர்வதேசத்தின் அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகம் என்னும் சட்டமூலம் இலங்கை அரசு கொண்டு வந்துள்ளது.

காணாமல் ஆக்குவதற்கு துணை நின்ற இராணுவம்,பொலிஸ்,துணை ஆயுதக் குழுக்களை பாதுகாப்பதற்காகும்.

இதற்கு ஆதரவளிப்பது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்படுவது வேதனைக்குரிய விடயமாகும் என இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஏழு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அசீஸிடமும் வழங்கப்பட்டுள்ளது.




# மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனவீர்ப்பு போராட்டம்!






சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்று மன்னார் நகரில் பேரணி ஒன்று இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்பேரணியானது மன் னார் இரண்டாம்கட்டையில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு அலுவலக முன்றிலிலிருந்து கோஷங்கள் இட்டவர்களாகவும் பதாதைகள் ஏந்தியவர்களாகவும் புறப்பட்டு மன்னார் பனித செபஸ்தியார் ஆலய வீதியூடாக மன்னார் மாவட்ட செயலகத்தின் முன்பாக உள்ள நாற்சந்தியில் ஒன்றுகூடி கோஷங்களை எழுப்பியும் உரைகளும் நிகழ்த்தினர்.

இந்தப் பேரணியில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் குணசீலன், தமிழரசு கட்சியின் முன்னாள் இளைஞர் மன்ற தலைவரும் மன்னார் பொது அமைப்புகளின் தலைவர் வீ.எஸ்.சிவகரன், மன்னார் பிரடிஜகள் குழு உப தலைவர் அருட்பணி ஜேசுதாஸ் அடிகளார், முன்னாள் மன்னார் நகர சபை உறுப்பினர் குமரேஸ் உட்பட காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர், உற்றார், உறவினர் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் வாகனம் ஒன்றில் காட்சிப்படுத்தப்பட்டு வீதி வலத்தில் கொண்டு செல்லப்பட்டன.

மேலும், இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர்.குணசீலன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி எம்.உதயசந்திரா, பெண்கள் அமைப்பின் தலைவி மகாலட்சுமி ஆகியோரும் உரையாற்றினர். (க-112)

# இனியும் ஏமாறத் நாம் தயாரில்லை; கிளிநொச்சி ஆர்ப்பாட்டத்தில் உறவுகள்!



கிளிநொச்சி, ஒக. 31

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று கிளிநொச்சி மாவட்டத் திலும் பேரணியுடன் கூடிய கவனவீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமல்ஆக்கப்பட்டோரை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி தொடர் போராட்டம் இடம் பெற்றுவரும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் ஆரம்பமான கவனவீர்ப்பு போராட்டம் ஊர்வலமாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது.

மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மாவட்ட செலக முன்றிலில் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவினர்கள், தமது உறவுகள் தொடர்பில் தீர்க்கமான பதில் வழங்கப்பட வேண்டும் என்றும் இனியும் ஏமாறத் தாம் தயாரில்லை எனவும் வலியுறுத்தி கோசங்களையும் எழுப்பினர்.

# நல்லூரில் கவனவீர்ப்பு போராட்டம்!




யாழ்ப்பாணம், ஒக. 31

சர்வதேச காணாமல் போனோர்தினத்தை முன்னிட்டு யாழ். நல்லூர் ஆலய முன்றிலில் பெரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டிருந்தது.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஒழுங்கு செய்யப்பட் டிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில், போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பேரணியாகச் சென்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில், ‘‘காணாமல் ஆக்கட்டவர்கள் தொடர்பில் சட்டமூலம் உருவாக்கப்பட வேண்டும், சுயாதீன நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் உள்நாட்டில் குற்றமாக்கப்பட வேண்டும். இறுதிப் போரின் போது படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும்.

இழப்பீடு மற்றும் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் உட்பட 10 கோரிக்கைகளை அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# முல்லைத்தீவிலும் கவனவீர்ப்புப் போராட்டம்!





முல்லைத்தீவு, ஒக. 31

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர்தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவிலும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

’சிந்துவதற்கு கண்ணீர் இல்லை, பிள்ளைகளை உடன் விடுதலை செய்யுங்கள்’, ‘காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணையை விரைவுபடுத்துங்கள்’, ’தடுத்து வைத்துள்ள எங்கள் உறவுகளை விடுதலை செய்யுங்கள்’ போன்ற பாதாதைகளைத் தாங்கியவாறு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் என பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஜனாதிபதி, பிரதமர், கூட்டமைப்பில் துளியளவும் நம்பிக்கை இல்லை

### சர்வதேச தலையீட்டை வலியுறுத்துகிறார் கஜேந்திரன்





யாழ்ப்பாணம்,ஓக.31

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் போர்க் குற்றம் செய்த படையினரைப் பாதுகாப்பதிலேயே அதிக அக்கறைகொண்டுள்ளனர் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்

மேலும், தமிழ் மக்களின் தலைவர்கள் எனத் தம்மைத் தாமே சொல்லிக்கொள்ளும் கூட்டமைப்பின் தலைமையும் போர்க்குற்றம் செய்த மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது சகாக்களையும் பாதுகாக்கின்றனர் எனவும் அவர்கள் மைத்திரி – ரணில் கூட்டரசின் கூலிகளாகச் செயற்படுகின்றனர் எனவும் சாடினார்.

எனவே, சர்வதேச சமூகம் எமது பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டுச் சர்வதேச விசாரணையூடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு – கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று தமிழர் தாயகத்தில் நடத்திய கவனவீர்ப்பு போராட்டத்தின் தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பது தொடர்பாக அரசாங்கம் உரிய பதில் வழங்கவில்லை.

குறிப்பாக இறுதிப் போரின் இறுதி நாள்களில் இராணுவத்தினரிடம் குடும்பத்தினரால் கையளிக்கப்பட்டதன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், மற்றும் வீடுகளில் குடும்ப உறவினர்களுக்கு முன்பாக இராணுவத்தினராலும், துணை இராணுவக் குழுவினராலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் கண்ணீருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எமது மக்கள், இளைஞர்கள் காணாமல் ஆக்கப்படுவதற்கு முக்கிய பொறுப்பாளிகளாகவுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் போன்ற அனைவரும் இந்த நாட்டில் மிகவும் வசதி வாய்ப்புக்களுடன் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் அப்பாவிகளான தமது பிள்ளைகளைப் பிரிந்து தாய், தந்தையரும், கணவன்மார்களைப் பிரிந்த மனைவியரும் சொல்லொணா வேதனைகளை அனுபவித்து வருகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தால் திறக்கப்பட்டு நடத்தப்பட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் வெறும் கண் துடைப்பு நாடகம்.

இந்த அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளின் கவனத்தைத் திசை திருப்பி, அவர்களுடைய நம்பிக்கையைச் சிதறடித்து நட்ட ஈட்டையும், மரணச் சான்றிதழையும் ஏற்றுக் கொள்ளச் செய்து, குடும்பத்தினரைத் தேடுவதற்கான முயற்சியைக் கைவிடச் செய்கின்ற சதி நடவடிக்கையே தவிர வேறொன்றுமல்ல.

இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதன் மூலம் எந்தவித நன்மைகளும் எமது மக்களுக்குக் கிடைக்கப் போவதுமில்லை. உள்ளக விசாரணையில் தமிழ் மக்களுக்குத் துளியளவேனும் நம்பிக்கையில்லை. – என்றார். (ம)

# தெல்லிப்பழையில் இன்று கைலாசவாகனத் திருவிழா

சுன்னாகம், ஓக.31

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை கைலாச வாகனத் திருவிழா இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தற்போது நடைபெற்றுவரும் திருவிழாக்களைத் தொடர்ந்து எதிர்வரும் 02 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இன்றைய கைலாச வாகனத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பெரியமடு நீர்வழங்கல் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது

மன்னார், ஓக.31

மன்னார் – பெரியமடு நீர் வழங்கல் திட்டத்தை நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுப் புதன்கிழமை திறந்து வைத்தார்.

மேற்படித் திட்டம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் நிறைவேற்றப்பட்டு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் செயல்படுத்தப்பட்டது.

மேற்படித் திட்டம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி சுகீர் முரளிகரன், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி செல்வி தியூசி மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், எம்.எம்.மஸ்தான், முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான முத்தலிப் பாறூக், உனைஸ் பாறூக் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-112)

# ஊடகவியலாளர்களுக்கு கடன்; விண்ணப்ப முடிவுத் திகதி இன்று

கொழும்பு, ஓக.31

ஊடகவியலாளர்களுக்கான விசேட கடன் திட்டத்திற்குரிய விண்ணப்பங்கள் இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்படும் என நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தில் ஊடகவியலாளர்கள் ஊடகம் சார்ந்த உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக அதிகபட்சத் தொகையாக 3 லட்சம் ரூபாவரை வட்டியின்றிக் கடனாகப் பெற முடியும்.

தம்மிடம் இருக்கும் ஊடக உபகரணத்தை விருத்தி செய்து கொள்வதற்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை தற்போதுள்ள வட்டி வீதத்தில் 50 சதவீத சலுகையுடன் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

3 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள 60 வயதுக்குக் குறைவான நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் சுதந்திர ஊடகவியலாளர்கள், பிராந்திய ஊடகவியலாளர்கள், இணையத்தள ஊடகவியலாளர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி: பணிப்பாளர் – ஊடகம், நிதி மற்றும் ஊடக அமைச்சு, இலக்கம் 163, கிருலப்பனமாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு – 5. (ம)

# உண்ணாவிரதத்தை கைவிட்டார் முருகன்



வேலூர், ஓக.31

வேலூர்சிறையில்தொடர்ந்து 13 நாள்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த முருகன் தனது போராட்டத்தைக் கைவிடுகின்றார் என அறிவித்துள்ளார்.

பொலிஸ் ஆணையாளரின் கோரிக்கையை ஏற்று தனது போராட்டத்தை கைவிடுகிறார் என அவர் நேற்று அறிவித்தார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றுள்ள முருகன் ஜீவசமாதி அடையவதற்கு அனுமதிகோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இதனையடுத்து கடந்த 13 ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். இதனால் அவரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்திருந்தது.

இந்நிலையில், வைத்தியர்கள் மற்றும் பொலிஸ் ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் தன்னுடைய உணவு தவிர்ப்பு போராட்டத்தைக் கைவிடுகின்றார் என அவர் அறிவித்தார். (முன்னர் வந்த செய்தி 14 ஆம் பக்கத்தில்) (உ)

# காணாமற்போனோருக்கு நீதி கோரி பிரித்தானியாவில் நேற்று கவனவீர்ப்பு

### நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில்

லண்டன், ஓக.31

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினமான நேற்று பிரித்தானியா பிரதமர் அலுவலகத்திற்கு முன்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. பிரித்தானிய நேரப்படி நேற்று மதியம் இப்போராட்டம் இடம்பெற்றது.

தமிழர் தாயகத்தில் நடைபெற்ற போராட்டங்களுக்கு நிகராக அந்தப் போராட்டமும் அமைந்திருந்தது.

இப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் தாங்கிய பதாகைகளையும் இலங்கை அரசின் இன அழிப்பு தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் வைத்திருந்தனர். அவர்கள் புலிக்கொடிகளையும் கைகளில் தாங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் கோரிக்கை மனு ஒன்றும் பிரதமர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிதல் தொடர்பாக அந்த மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படிப் போராட்டத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருமளவான பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தனர். (ம)



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com

தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk

விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தமிழர் பங்களிப்புடன் அரசமைப்பு

மஹிந்த ராஜபக்ஷ - சம்பந்தன் மந்திராலோசனையின் போது மிக முக்கியமான விடயம், ஒன்றை சம்பந்தன் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

அரசமைப்பு உருவாக்கத்தில் மக்கள் பங்களிப்புப் பற்றிய விடயமே அது.

இருபக்கமும் கூர்மையான கத்தி போன்றதே அந்த விடயம். அதனைச் சம்பந்தன் எந்த அடிப்படையில் உணர்ந்து எடுத்துரைத்தார் என்பது தெரியவில்லை.

சுதந்திர இலங்கை சோல்பரி அரசமைப்பாக இருக்கட்டும், அதற்குப் பின்னர் 1972 இல் கொண்டுவரப்பட்ட இலங்கைக் குடியரசு அரசமைப்பாக இருக்கட்டும், அல்லது அதற்குப் பின்னர் 1978இல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்டு, கடந்த 3 தசாப்தங்களாக நடைமுறையில் இருக்கும் தற்போதைய அரசமைப்பாகட்டும், அவை எவையுமே தமிழர்களின் இணக்கத்துடன் - சம்மதத்துடன் - பங்களிப்புடன் - இந்த நாட்டில் நிலைநிறுத்தப்பட்டவையே அல்ல.

1948 இல் பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது முதலே, இலங்கை நாடாளுமன்றத்தில் - இந்த நாட்டில் - எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்ற வாய்ப்பை வைத்துக்கொண்டு சிங்களப் பேரினவாதமே கொடுங்கோன்மையின் கருவியாக அதிகாரம் செலுத்தியது. அங்கு இனவாதமே அரசோச்சியது. சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்களே அங்கு யாக்கப்பட்டன.

அத்தகைய கொடிய இனவாதப் போக்கில் அதே நாடாளுமன்றங்களில் உருவாக்கப்பட்டவையே 1972 மற்றும் 1978 அரசமைப்புகள் என்பதும் மறுக்கப்படவியலாதது.

அந்த இரு அரசமைப்புகளின் உருவாக்கங்களிலும், இந்த நாட்டின் தனித்த தேசிய இனமாக வாழும் தமிழர்கள் பங்குகொள்ளவே இல்லை. மாறாக, அவற்றை அவர்கள் ஒட்டுமொத்தமாக - ஒன்றுபட்டு - எதிர்த்தார்கள். சிங்களப் பெரும்பான்மையினர் எண்ணிக்கையில் தங்களின் வலிமையைப் பயன்படுத்தி, எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது வல்வந்தமாக அந்த அரசமைப்புக்களைத் திணித்தார்கள்.

ஒருதலைப் பட்சமாகத் தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட இந்த ஒற்றையாட்சி அரசமைப்புகளும் அவற்றின் அடிப்படையில் இலங்கை நாடாளுமன்றங்களில் கட்டவிழ்ந்த அடக்குமுறைச் சட்டங்களுமே நீதி வேண்டி, நியாயம் தேடி, ஆயுதம் ஏந்திப் போராடத் தமிழர்களை நிர்ப்பந்தித்தன என்பது நமது இலங்கைத் தீவின் வரலாறு.

தமிழர்கள் சம்பந்தப்படாத - அவர்கள் மீது தென்னிலங்கையால் ஒருதலைப்பட்சமாகத் திணிக்கப்பட்ட - அடக்குமுறைப் போக்கில் அமைந்த - அரசமைப்புச் சட்டங்களின் கீழ் தமிழர்கள் வல்வந்தமாக ஆளப்படுகின்றார்கள் என்ற கருத்தியல் - அல்லது உண்மை - தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை இன்றுவரை நியாயப்படுத்தி நிற்கின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை சர்வதேச சமூகமும் ஏற்று அங்கீகரிப்பதற்குப் பிரதான காரணிகளுள் ஒன்றாக இது அமைந்திருக்கின்றது.

இதனைச் சம்பந்தன் நேற்றுமுன்தினமும் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

"இதுவரையான அரசமைப்பு உருவாக்கங்களில் தமிழர்கள் சம்பந்தப்படவில்லை. அவை தமிழர்கள் மீது திணிக்கப்பட்டன. இப்போது முதல் தடவையாக சகல தரப்புகளும் - சகல இன மக்களும் - தமிழர்களும் - ஒன்றிணைந்து - ஓர் அரசமைப்பை உருவாக்கி, அங்கீகரித்து, நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது. அதற்கு ஒத்துழையுங்கள் - என்ற கோரிக்கையைத்தான் வேறு வார்த்தைகளில் சம்பந்தன் ஐயா முன்வைத்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

நல்லது. அப்படி ஆதரவைத் தேடித் திரட்டுவது சம்பந்தனின் தற்போதைய முயற்சிக்கு நல்ல வலுவூட்டும் எத்தனம்தான் என்பதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனாலும், இருபக்கமும் கூர்மைகொண்ட கத்திபோல இதன் மறுபக்கத்திலும் ஒரு விடயம் இருப்பதை சம்பந்தன் மறந்துபோய் விடக்கூடாது.

சரியோ, பிழையோ, இதுவரையான அரசமைப்புக்களில் இந்தத் தீவின் பிரதான தேசிய இனங்களின் ஒன்றான தமிழர் தரப்பின் இணக்கம் இருக்கவில்லை.

இப்போது சம்பந்தனின் பங்களிப்பால் - பங்குபற்றலினால் - இந்த அரசமைப்பு முயற்சியில் தமிழர்களின் பங்குபற்றல் வந்துவிடுகின்றது. நாமும் அந்த அரசமைப்பு உருவாக்கத்தின் பங்காளிகளாகப் போகின்றோம்.

அரசியல் தீர்வை உள்ளடக்கிய - தமது இணக்கத்துடன் - உருவாகின்ற - அந்த அரசமைப்பில் தமிழர்கள் எதிர்பார்க்கும் நியாயமான தீர்வுகள் உள்ளடங்காவிடில் தமிழர்களைப் பொறுத்தவரை விடயங்கள் எல்லாமுமே அடிபட்டுப்போய்விடும் என்பதுதான் உண்மை.

நாமும் இணங்கிப் பங்களித்த தீர்வை நாமே எதிர்த்துப் போராட முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

நாம் இணங்கி - சேர்ந்து - தயாரித்த அரசமைப்பு தவறானது என்று கூறி, அதற்குப் பின்னரும் நாம் நீதி கோரிப் போராட இறங்குவோமானால் யாரும் எம்மை அங்கீகரிக்கவும் மாட்டார்கள்; ஏற்கவும் மாட்டார்கள். இதனைச் சம்பந்தன் ஐயா மறக்காமல் காரியங்களை நகர்த்தவேண்டும்.

# கடற்படைத் தளபதியுடன் விமானப்படைத் தளபதி சந்திப்பு!



கொழும்பு, ஓக. 31

இலங்கை கடற்படையின் 21 ஆவது கடற்படைத் தளபதியாக கடமையேற்றுள்ள வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா மற்றும் விமானப் படை தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

விமானப்படைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் புதிய கடற்படைத் தளபதிக்கு விமானப்படை தளபதி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மேலும் எதிர்கால நடவடிக்கைகளின்போது விமானப் படையின் விரிவாக்கப்பட்ட ஆதரவு கடற்படைக்கு வழங்கப்படும் என்பதையும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பை நினைவு கூரும் வகையில் இரு தரப்பிற்கும் இடையேயான நட்பு மற்றும் நல்லுறவு குறித்து நினைவுச் சின்னங்களும் இதன்போது பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன. (க)

# வடமாகாண வைத்தியசாலைகள் அபிவிருத்தி!

கொழும்பு, ஓக. 31

வடக்கு மாகாணத்தில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வடமாகாணத்தில் உள்ள மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகளை வழங்குதல் மற்றும் பொதுமக்கள் மீளக் குடியமர்த்தப்படும் பிரதேசங்களில் சுகாதார அடிப்படை வசதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைவாக இந்தப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதற்கமைவாக நெதர்லாந்து அரசு நிதியுதவியுடன் கூட்டு முயற்சியாக வடக்கு மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் பெரியாஸ்பத்திரி மற்றும் பருத்தித்துறை, மாங்குளம் ஆகிய ஆதார வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இது தொடர்பாக சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத் தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க)

# அரசியல் கட்சி பிரமுகருக்கு எதிராக அவதூறு; இணையத்தளம் ஒன்றுக்கு எதிராக முறைப்பாடு!

வவுனியா, ஓக.31

வவுனியாவில் அமைந்துள்ள ரெலோ கட்சியின் பிரமுகர் ஒருவருக்கு அவதூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ரெலோ அமைப்பின் வவுனியா மாவட்ட இணை அமைப்பாளர் ஒருவருக்கு எதிராகவே அவதூறு ஏற்படுத்தும் வகையில் இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

அண்மையில் பாடசாலை அதிபர் ஒருவருக்கு எதிராக வெளிவந்த செய்தி ஒன்றினையடுத்து சில முகப் புத்தகங்களில் குறித்த ரெலோ அமைப்பின் தலைவரையும், அந்த அதிபருடன் இணைத்து செய்திகள் வெளியாகி இருந்தன.

அதற்கு எதிராக வவுனியா பொலிஸ் நிலையத்தில் ரெலோ அமைப்பின் மாவட்ட இணை அமைப்பாளரால் முறைப்பாடு செய்யப்பட்டு அந்த முகப் புத்தகம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று அந்த தகவல்கள் நீக்கம் செய்யப்பட்டிருந்தன.

தற்போது சில நாள்கள் கழிந்த நிலையில் வெளிநாட்டை தளமாகக் கொண்டு இயங்கும் இணையம் ஒன்று ரெலோ அமைப்பின் மாவட்ட இணை அமைப்பாளருக்கு எதிராக ஆதாரபூர்வமற்ற வகையில் அவருக்கும், அவரது கட்சிக்கும் சேறு பூசும் வகையில் செய்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணை செய்து தனிப்பட்ட நபர்களை இலக்கு வைத்து ஆதாரமற்ற செய்தியை வெளியிட்ட அந்த இணையம் மீது நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா பொலிஸில் அவர் முறைப்பாடு செய்துள்ளார். (க-100)

# வவுனியா நகைக்கடை உரிமையாளரும் முறைப்பாடு!

வவுனியா, ஓக.31

இணையத்தளம் சிலவற்றில் தனக்கு எதிராக உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டு அவதூறை ஏற்படுத்தியதாக நகைக்கடை உரிமையாளர் ஒருவரும் நேற்றுமுன்தினம் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வெளிநாட்டைத் தளமாக கொண்டு இயங்கும் சில இணையத்தளங்கள் தனது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் உண்மைக்கு மாறான நன்கு சோடிக்கப்பட்ட செய்திகளை வெளியிட்டு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதுடன், தமது தொழில் நடவடிக்கையும் பாதிப்படையச் செய்யதுள்ளன என்றும் தெரிவித்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள நகைக்கடை உரிமையாளர் ஒருவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு வலயப் பாடசாலை ஒன்றில் பணியாற்றும் அதிபர் ஒருவர் தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ள இணையங்கள் அதில் தனது பெயரையும் இணைத்து தனது நற்பெயரைக் களங்கப் படுத்த முயற்சித்துள்ளதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த முறைப்பாட்டை பெற்றுக் கொண்ட வவுனியா பொலிஸார் சைபர் கிராம் மூலம் நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர் எனவும் நகைக்கடை உரிமையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-100)

## நாளை

01.09.2017

வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : பூராடம் முழுவதும்

திதி : தசமி காலை 7.56 வரை

சுபநேரம் : 6.05 – 7.35 வரை

இராகுகாலம் : 10.35 – 12.05 வரை

# மறுமலர்ச்சி மன்ற இளைஞர்களின் முயற்சியில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி!

## பண்டத்தரிப்பு காலையடியில்



யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் அமைக்கப்படவுள்ள மழைநீர் சேகரிப்புத் தொட்டியினுடைய கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிதி ஒதுக்கீட்டில் பண்டத்தரிப்பு - காலையடி மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தால் இந்த மழைநீர் சேகரிப்புத்தொட்டியினுடைய கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் உப தலைவர் ச.அனுஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தீவக கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளருமான சு.சுந்தரசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அத்துடன், சங்கானைப் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் இ.மிதுன்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்தப் பிரதேச நிலத்தடி நீர் நீண்ட காலமாக உவர் தன்மை பெற்றுக் காணப்படுகின்ற நிலையில் மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொது மக்கள் தமது குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்குப் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில், மறுமலர்ச்சி மன்ற இளைஞர் கழகத்தினரின் முயற்சியால் அதற்கு முடிவு காணப்பட்டுள்ளமையை பிரதேச மக்கள் பலரும் மகிழ்வுடன் வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி உத்தியோகத்தர் வாகன விபத்தில் பலி!



முல்லைத்தீவு, ஓக. 31

முல்லைத்தீவு - முள்ளியவளை புதரிகுடாப் பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகனவிபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை புதரிகுடாப் பிரதேசத்தில் உழவு இயந்திரம் ஒன்றில் சமுர்த்தி உத்தியோகத்தர் இருவர் பயணம் செய்துள்ளனர்.

இதில் ஒருவர் வாகனத்தைச் செலுத்தியுள்ளதுடன், அருகில் இருந்தவர் தவறிவிழுந்தமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் தண்ணீரூற்று, ஊற்றங்கரையைச் சேர்ந்த து.நிசாந்தன் (வயது 34) என்ற முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவின் கீழ் சமுர்த்தி திணைக்களத்தில் கடமையாற்றுகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 52 ஆயிரம் மெற்றிக் தொன் உள்நாட்டு அரிசி சந்தைக்கு விநியோகம்!

கொழும்பு, ஓக. 31

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 52 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கமைய இந்த அரிசி உள்நாட்டு சந்தையில் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்தியாவில் இருந்து உடனடி தேவைக்கான அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சியில் துரித வேலைத் திட்டம்; டெங்கு நுளம்புகளை அழித்தொழிப்பதற்காக!



வட்டக்கச்சி - மாயவனூர் பகுதியில் 200 மீற்றர்கள் இடைவெளிக்குள் மூன்று டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அந்தப் பகுதியில் காணப்படும் டெங்கு நோய் காவி நுளம்புகளை அழிப்பதற்காக விசேட வேலைத்திட்டங்கள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விழிப்புணர்வு மற்றும் அபாயத் தவிர்ப்பு நடவடிக்கைகளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவபீட மாணவர்களும் ஈடுபட்டு



வருகின்றனர்.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 831 பொதுமக்கள் டெங்கு தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

## சீரற்ற நிலையில் புளியமுனை பாதை!





முல்லைத்தீவு, ஓக. 31

முல்லைத்தீவு - புளியமுனையில் காணப்படும் உணவுப் பயிர்ச்செய்கை நிலங்களுக்குச் செல்லும் பாதை சீரற்றுக் காணப்படுகின்றது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்தப் பிரதேசத்தை நேற்று முன்தினம் வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இது தொடர்பில் ரவிகரன் தெரிவித்தவை வருமாறு:-

செம்மலை மக்களுக்குரிய வாழ்வுடைமை நிலங்கள் புளியமுனைப்பகுதியில் உள்ளன. இந்நிலங்களில் உப உணவுப் பயிர்ச்செய்கையை செய்து வருகின்றார்கள்.

இந்த மக்களின் இடர் நிலையை தீர்ப்பதற்கு பாலம் அமைக்கும் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இயன்றவற்றைச் செய்து தருவேன் என்று மக்களிடம் வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் வாக்குறுதியளித்துள்ளார்.

## யாழ். மாணவர்களின் உயிரிழப்பு தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் வெளியிட்ட தகவல்!

யாழ். சிறுதீவு கடலில் படகு மூழ்கி ஆறு மாணவர்களின் உயிரிழப்பு குடாநாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழந்த மாணவர்கள் மது அருந்தியமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது என முதற்கட்டமாக தகவல் வெளியாகி இருந்தது.

எனினும், ஆறு மாணவர்களும் நீரில் மூழ்கியதனாலேயே உயிரிழந்துள்ளார்கள் என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆறு மாணவர்களும் மது அருந்தியிருந்தார்களா என்பது தொடர்பில் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. மது அருந்தியுள்ளார்களா? என அறிந்து கொள்ள மாணவர்களின் உடல் கூறுகள் எடுக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி.சத்தியலிங்கம் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிரிழந்த மாணவர்களின் சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய மாணவர்கள் நீரில் மூழ்கியமையினாலேயே உயிரிழந்துள்ளார்கள் என்பது சட்ட வைத்திய அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னரே அவர்கள் ஏதாவது அருந்தியுள்ளார்களா? என்பதை உறுதியாக வெளிப்படுத்த முடியும் என கூறினார்.

## படைவீரர் நினைவுத்தூபியை அகற்றுமாறு கோரிக்கை!

கிளிநொச்சி படைவீரர் நினைவுத்தூபியை அகற்றுமாறு, கிளிநொச்சி மாவட்ட செயலாளர் அருமை நாயகம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மகஜர் ஒன்றின் ஊடாக கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட இணைப்புக் கூட்டத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் இது தொடர்பில் யோசனை முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில், இராணுவ நினைவுத் தூபியை அகற்றவேண்டுமென முன்வைத்த யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கிளிநொச்சியில் அமைந்துள்ள இராணுவ நினைவுத் தூபி நல்லிணக்கத்திற்கு தடையாக அமைந்துள்ளது என ஜனாதிபதிக்கு மாவட்ட செயலாளர் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது என சிங்கள பத்திரிகை யொன்று தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir


# 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் வருவதை மட்டு. அரசியல்வாதிகள் விரும்பவில்லை!

மட்டக்களப்பு, ஓக. 31

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒருசில அரசியல்வாதிகள், 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் வருவதை ஏற்றுக் கொள்ள முடியாமல் தலையில் இடி விழுந்தமை போல் காணப்படுகின்றனர் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள மாவடிச் சேனை அல்-இக்பால் வித்தியாலய புதிய வகுப்பறைக் கட்டடத்துக்கு அடிக்கல் நட்டு வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

20 ஆவது அரசமைப்புத் திருத்தம் மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்றத்திற்குச் செல்கின்ற





வேளையில், தற்போதிருக்கும் கிழக்கு மாகாண சபை ஆட்சி நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் தொடர்ந்தும் இருக்கும்.

உயர்நீதிமன்றத்திலும் இதற்கான அங்கீகாரம் கிடைத்து

**கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிக்கிறார்**

விடும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டதன் பின்பு பெரிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்னைய பேரினவாத அரசுகள் சிறுபான்மையினருக்கான அரசியல் அதிகாரங்களைப் பறித்தெடுப்பதில் ஆர்வமாக இருந்தன.

அதற்கு மாற்றமாகத் தற்போதைய நல்லாட்சி அரசு சிறுபான்மையினருக்கும் அரசியல் அதிகாரங்கள் கிடைக்கப் பெற வேண்டும் என்பதில் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது.

நல்லாட்சியிலே பொருட்களுக்கு விலை அதிகரிப்பு ஏற்பட்டதால் நல்லாட்சி பொல்லாட்சியா என எல்லோரும் கேட்கின்றமையை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலைமைக்கு நல்லாட்சி அரசைத் தள்ளி கடனாளி நாடாகவும், அடிமை நாடாகவும் ஆக்கியவர்கள் கடந்த ஆட்சியாளர்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது.

விலை அதிகரிப்புச் சுமை நீண்ட காலம் இருக்காது. நல்லாட்சி கடன் சுமையிலிருந்து மீண்டதும், பொருள்களின் விலை இயல்பாகக் குறைந்து விடும்.

நல்லாட்சியிலே எத்தனையோ நல்ல விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், லஞ்சம் ஊழலுக்குப் பழக்கப்பட்டுப் போய் மக்களைச் சுரண்டி வாழ்ந்த அதிகாரிகள் பண முதலைகள் ஆகியோருக்கு நல்லாட்சி வெறுப்பைத் தான் கொண்டு வரும்.

மற்றெல்லா மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் விட அரசியல் மறுசீரமைப்பு என்பது சிறுபான்மைச் சமூகத்திற்கு முக்கியமானது.

இதனை அடைந்து கொள்வதில் சிறுபான்மையினராகிய நாம் மிகவும் சாணக்கியத்துடன் காய் நகர்த்த வேண்டும்.

தோற்றுப் போகாதவர்களாக சிறுபான்மை மக்களை நாம் கவனமாகப் பாதுகாத்து எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய களப்பணி சிறுபான்மை சமூகத் தலைவர்களுக்கு உள்ளது.

மேலும், இந்த விடயத்தில் இன ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு சமரச ஒத்துழைப்பு என்பன முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கிழக்குப் பல்கலை மாணவர்களால் மக்களுக்குத் தெளிவூட்டும் பேரணி!

மட்டக்களப்பு, ஓக. 31

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது போராட்டம் தொடர்பில் பல்கலைக்கழகத்தை அண்டியுள்ள மக்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று முன்தினம் மேற் கொண்டுள்ளனர்.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படும் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டட முற்றுகைப் போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வாக இந்த பேரணி நடத்தப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக மாணவர்கள் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து தற்போது அதில் இரண்டு முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் 100 நாள்களை கடந்துள்ள நிலையிலும், நிர்வாகக் கட்டட முற்றுகைப் போராட்டம் 21 நாட்களைக் கடந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த பேரணியில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுடன், தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு ஆதரவை



வழங்கியிருந்தனர்.

இதன்போது கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லியனாராச்சி தெரிவித்தவை வருமாறு:-

மாணவர்களின் உரிமை தொடர்பான போராட்டத்திற்கு இதுவரையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தால் எவ்வித பதில்களும் வழங்கப்படவில்லை. இவ்வாறு தொடர்ந்து செயற்படுவார்களாயின் தற்போது தென் கிழக்குப் பல்கலைக் கழகம் மாத்திரமே எம்முடன் ஆதரவுக்கு வந்துள்ளது.

இனிவரும் காலங்களில் இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களின் ஆதரவையும் பெற்று எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

# திருப்பெருந்துறைத் திண்மக்கழிவு தீ அனர்த்த பகுதிக்கு அமீர் விஜயம்!



மட்டக்களப்பு, ஓக. 31

மட்டக்களப்பு திருப்பெருந்துறை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலைய தீ அனர்த்தத்திற்கும் அந்த பகுதி மக்களின் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வுக்கும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

கடந்த 8 நாள்களாக எரிந்து வரும் மட்டக்களப்பு திருப் பெருந்துறை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலைய தீ அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்கள் கொத்துக் குளத்து முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்னால் 3 ஆவது நாளாகவும் நேற்று முன்தினம் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களை நேரில் சந்தித்து உரையாடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார்.



அப்போது நீண்ட நாளாக இருக்கும் இந்தத் திண்மக்கழிவுப் பிரச்சினைக்குரிய தீர்வை அவரின் கவனத்திற்கு கொண்டு வரப்படும்.

மக்கள் பிரதிநிதிகளையும் உரிய அதிகாரிகளுடன் அவசரமாக விஷேட மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தைக் கூடி இதற்குரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இதற்காக கூட்டம் ஒன்றையும் ஏற்பாடு செய்யு மாறு மாவட்ட செயலாளருக்கு தொலைபேசியில் பணிப்புரை விடுத்துள்ளேன்.- என்றார்.

# கொழும்பில் இன்று தொடங்குகிறது இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு!

கொழும்பு, ஓக. 31

'இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு 2017' கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் பங்கேற்க இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையிலான உயர்மட்டக் குழு புதுடில்லியில் இருந்து கொழும்பு வரவுள்ளது.

சுமார் 35 நாடுகள் பங்கேற்கும் இந்தக் கருத்தரங்கு இலங்கைப் பிரதமரின் செயலகமான அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இதில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 25 பேச்சாளர்கள் உரையாற்றவுள்ளனர்.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதி, முன்னேற்றம், செழிப்பு என்ற தொனிப்பொருளில், புதுடில்லியைத் தளமாகக் கொண்ட இந்தியா பவுண்டேசன் அமைப்பு இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தியாவின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில், வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெயசங்கர், ரயில்வே துறை அமைச்சர் சுரேஷ் பிரபு உள்ளிட்ட குழுவினர் பங்கேற்கின்றனர்.

அமெரிக்கா சார்பில், தெற்கு மத்திய ஆசியாவுக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ் தலைமையிலான உயர்மட்டக் குழு பங்கேற்கிறது.

### பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பு




பங்களாதேஷ், ஜப்பான், நேபாளம், மொரிஷியஸ், வியட்நாம் ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் மட்டக் குழுக்களும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜேர்மனி, கென்யா, தென் கொரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் அதிகாரிகள் மட்டக் குழுக்களும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கவுள்ளன.

அதேவேளை, அழைப்பு பேச்சாளர்களின் பட்டியலில் சீனப் பிரதிநிதிகள் எவரும் இடம் பெறவில்லை.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அமைச்சர் சாகல ரத்நாயக்க, கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் சீனாவின் பிரதிநிதியாக பங்கேற்பார். பல்வேறு சீன அமைப்புகளும் இதில் கலந்து கொள்கின்றன என்று கூறினார். (க)

## உமா ஓயா திட்டம்: பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டு வாடகை, உலர் உணவு!

கொழும்பு, ஓக. 31

உமா ஓயா திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டு வாடகை மற்றும் உலர் உணவுப் பொருள்களை வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

மாதாந்தம் 10,000 ரூபா முதல் 25,000 ரூபா வரை 6 மாதங்களுக்கு இந்த வாடகை கொடுப்பனவு வழங்கப்படும்.

அதேவேளை, இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (க)

# போர்க்குற்ற வழக்கை எதிர்கொண்டுள்ள பிரேசில் தூதுவர் ஜெகத் ஜயசூரிய எங்கே?

கொழும்பு, ஓக. 31

பிரேசில், கொலம்பியா ஆகிய நாடுகளில் போர்க்குற்ற வழக்குகளை எதிர்கொண்டுள்ள இலங்கைத் தூதுவர் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, பிரேசிலை விட்டு வெளியேறி விட்டார் என, ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இறுதிக்கட்ட போரின் போது, இடம்பெற்ற படுகொலைகள், சித்திரவதைகள், காணாமற் போதல்களுக்கு பொறுப்பாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் இராணுவத் தளபதியும், பிரேசிலில் இலங்கைக்கான தூதுவராகப் பணியாற்றிய வருமான ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக கடந்த திங்கட்கிழமை பிரேசிலில் உள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தென்னாபிரிக்காவை தளமாக கொண்ட, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் தலைமையிலான மனித உரிமை அமைப்புகள் இணைந்து இந்த போர்க்குற்ற வழக்கைத் தாக்கல் செய்துள்ளன.



ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, பிரேசிலில் இருந்து கொண்டு, ஆர்ஜென்ரீனா, கொலம்பியா, பெரு, சூரினாம், சிலி ஆகிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றி வந்தார்.

இதனால், பிரேசிலில் மாத்திரமன்றி, கொலம்பியாவிலும், அவருக்கு எதிராக நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஏனைய நாடுகளிலும் வழக்குகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜெனரல் ஜெகத் ஜயசூரிய எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை என ஏ.பி. செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, கடந்த ஞாயிற்றுக்கிழமையே பிரேசிலை விட்டு வெளி யேறி விட்டார் என பிரேசிலின் நீதித்துறை அதிகாரிகள் தமக்குத் தெரிவித்தனர் என இந்த வழக்குத் தொடுத்துள்ள சட்டவாளர் கார்லோஸ் காஸ்ரெசானா பெர்னான்டஸ், ஏபி செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

அவர் இப்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை எனவும் ஏ.பி. செய்தியில் கூறப்பட்டுள்ளது. (க)

## போர்க்குற்ற வழக்கினால் ஜெகத் ஜயசூரிய தப்பியோடவில்லை !



இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் போர்க்குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தொடர்பாக, இன்னமும் அதிகாரபூர்வ அறிவிப்புஏதும்கிடைக்கவில்லைஎன்றுஇலங்கை வெளிவிவகாரஅமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கைவெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினிகொலன்னே தெரிவித்தவைவருமாறு:-

பிரேசில், கொலம்பியா,பெரு,சிலி,ஆர்ஜென்ரீனா, சூரினாம் ஆகிய நாடுகளுக்கான தூதுவராக கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றிய ஜெனரல் ஜெகத்ஜயசூரிய, நேற்று முன்தினம் பிரேசிலை விட்டுப் புறப்பட்டுவிட்டார். அவர்இன்று(நேற்று) கொழும்பை வந்தடைவார்.

இந்த மாதத்துடன் அவரது பதவிக்காலம் முடிவடையும் நிலையிலேயே நாடுதிரும்புகிறார்.

போர்க்குற்ற வழக்கினால் அவர், பிரேசிலை விட்டு வெளியேறியுள்ளார் என வெளியான செய்திகள் தவறு.

அவரது பயணம்முன் கூட்டியேதிட்டமிடப்பட்டது. வழக்கினால் அவர் அங்கிருந்து வெளியேறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மத்தள விமான நிலைய அபிவிருத்தி குறித்து இந்தியாவுடன் பேச அமைச்சரவை உபகுழு!

கொழும்பு, ஓக. 31

மத்தள விமான நிலையத்தை இந்திய நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளதை அடுத்து, அதனை எவ்வாறு சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம் என்பது தொடர்பாக இலங்கை அரசு இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளது என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக உப குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், இன்னமும் இறுதி இணக்கப்பாடு ஏற்படவில்லை.

விமான நிலையத்துடன் இணைந்ததாக, விமான பயிற்சி பாடசாலை, விமானப் பராமரிப்பு மையம் என்பன வற்றை அமைப்பது குறித்த யோசனைகளும் இதில் அடங்கியுள்ளன.

மத்தள விமான நிலையத்தை வர்த்தக விமான சேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடு விதிப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும், இலங்கை அரசு ஆலோசித்து வருகிறது என்றும் கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.



# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்!

மன்னார், ஒக. 31

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசு சர்வதேசத்துக்கு கண் துடைப்பாக செயற்படுகிறதே ஒழிய உண்மையை கண்டுபிடிக்காது இருந்து வருகின்றது.

ஆகவே சர்வதேசம் இலங்கை அரசுக்கு இது விடயமாக அழுத்தம் கொடுக்க வேண்டும் அல்லது சர்வதேசம் நேரடியாக இந்த விடயத்தில் செயல்பட வேண் டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்த காலத்தின்போது சரணடையும்படி இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதுக்கிணங்கத் தங்கள் குடும்பம் சகிதம் சரண் அடைந்தவர்கள் இன்று எட்டு வருடங்கள் முடிந்த நிலையிலும் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது அல்லது அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்ற உண்மையைத் தெளிவுபடுத்தாமல் இந்த அரசு இன்று வரை எந்தவித மான முயற்சியும் இல்லாமல் இருக்கின்றது.




## சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

சர்வதேசத்தின் கண்துடைப்புக்காக காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகம் திறப்பதற்கான நாடாளுமன்றில் சட்டத்தை அமுல்படுத்திய படியே இருக்கின்றது.

உண்மையில் ஒப்படைக்கப்பட்டவர்கள் வலு கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசால் எந்தவிதமான பதிலும் இன்றுவரை எமது மக்களுக்கு வழங்கவில்லை.

அந்தவகையில் சர்வதேச நீதி விசாரணையால் மட்டுமே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனக் கண்டு பிடிக்க முடியும்.

எனவே, இலங்கை அரசின் விசாரணைகள் சர்வதேசத்தின் கண்துடைப்பாக அமையுமே தவிர, உண்மையில் இந்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றால். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உண்மை தெரியவர வேண்டுமானால் சர்வதேச விசாரணை அவசியம்.

ஆகவே, நாங்கள் சர்வதேசத்தை கேட்டுக் கொள்வதென்ன வென்றால் இந்த நீதி விசாரணையில் இலங்கை அரசுக்கு சர்வதேசம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அல்லது சர்வதேசம் நேரடியாக ஈடுபட்டு பாதிப்படைந்திருக்கும் மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண் டும் என நான் இங்கு வேண்டி நிற்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-112)

## தினசரி ராசி பலன் 31.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் தசமித் திதி முழுவதும். நட்சத்திரம்- மூலம் பி.இ 04.46 மணி வரை. பின்னர் பூராடம். சித்த யோகம் முழுவதும். ராகுகாலம்- பகல் 01.42 மணி முதல் 03.14 மணி வரை. சுபநேரம்- காலை 07.35 மணி முதல் 09.04 மணி வரை.

இன்று திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: மூலம். இன்று ஆவணி மூலம்

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்** : நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாகக் காணப்படும். மாணவர்கள் சுறுசுறுப்பும், உற்சாகமும் மேலோங்கிக் கல்வியில் கவனம் செலுத்துவார்கள்.

**ரிஷபம்** : கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்கள் உண்டாகும். வேலைப்பளு அதிகமாகும். பணம் கொடுக்கல் வாங்கலில் இழப்புகள் ஏற்படும்.

**மிதுனம்**: சம பலன்கள் காணப்படுகின்றன. புத்திரர் உதவிகள் குறைவதுடன் கவலைகளும் உண்டாகலாம். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வருவாய்க்கு மேல் செலவு உண்டாகும்.

**கடகம்** : இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். சிலருக்கு பதவி உயர்வுகள் போன்ற வாழ்க்கை சிறப்புகள் உண்டாகும். குடும்பம் குதூகலமாய் இருக்கும்.

**சிம்மம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயரும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். வசதியான புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சகோதர வழியால் நன்மை உண்டாகும்.

**கன்னி**: சலனம் மிகுந்த நாள் ஆகும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடையாமல் போகும். மறைமுக எதிரிகளைச் சமாளிக்க நேரும். வேலைப்பளு, மன நிம்மதி குறைந்து காணப்படும்.

**துலாம்**: மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். அலைச்சல் கூடுத லாக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை.

**விருச்சிகம்** : இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். தொழிலில் முன்னேற்றமும், கௌரவமும் உண்டாகும். சிலர் குடும்பத்துடன் சுற்றுலா செல்வார்கள்.

**தனுசு** : துயரமான நாள். பணத்தட்டுப்பாடு உண்டாகும். குடும்பத்தில் நல்லுறவும், அமைதியும் உண்டாகும். விவசாயிகளுக்கு தொழில் சிறப்பும்,வாழ்க்கை வசதியும் உண்டாகும்.

**மகரம்**: துயரமான நாள். பணத்தட்டுப்பாடு உண்டாகும். குடும்ப உறவில் விரிசல்கள் உண்டாகும். மாணவர், ஆசிரியர் பிணக்குகள் அதிகரிக்கும். வியாபாரம் மந்த நிலையை அடையும்.

**கும்பம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். வியாபாரிகளுக்கு அழகுசாதனப் பொருள்களால் லாபம் வரும். மாணவர்கள் பரீட்சையில் வெற்றி அடைவார்கள்.

**மீனம்** : சம பலன்கள் காணப்படுகின்றன. காரியத் தடை உண்டாகும். ஆரோக்கியம் பாதிப்புறும். உத்தியோக வாய்ப்புகள் தடைப்பட்டுப் போகும்.

சந்திராட்டமநாள்: கார்த்திகை 2,3,4 ஆம் கால்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடு வதைத் தவிர்க்கவும்.

# ஆலய உற்சவங்கள்

வட்டுக்கோட்டை,ஒக.31

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மாதாந்தம் மூலநட்சத்திரத்தில் நடைபெற்று வரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு விசேடம் மிக்க ஆவணி மூல தினமான இன்று காலை 6.30 மணி தொடக்கம் ஆரம்பமாகி இடம்பெற உள்ளது.

இந்த நிகழ்வில் அடியார்களைக் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (இ)

⋆ ⋆ ⋆

அளவெட்டி,ஒக.31

அளவெட்டி நாகவரத நாராயணர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவை அடுத்து இரவு 7.30 மணிக்கு உறியடி உற்சவமும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

⋆ ⋆ ⋆

ஆனைக்கோட்டை,ஒக.31

ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் (சம்பந்தப் பிள்ளையார்) ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த திங்களன்று கொடியேறி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10.45 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

⋆ ⋆ ⋆

மண்கும்பான் ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் வருடாந்தத் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை மாலை சப்பைரதத் திருவிழாவும் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (இ)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,ஒக.31

தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழன் முற்பகல் 11 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரச திணைக்களப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார். (இ)

## சண்டிலிப்பாய் பிரிவு கலைஞர்களுக்கான ஒன்று கூடல்

சண்டிலிப்பாய்,ஒக.31

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு கலைஞர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் கருத்துப் பகிர்வுடனான ஒன்று கூடல் நடத்துவதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

2017 இல் பதிவுகளை மேற்கொள்ளாத கலைஞர்கள் தங்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் வழங்கி உதவுமாறு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# காணாமற்போனோரின் உறவினர்களை சர்வதேச மன்னிப்புச் சபை சந்தித்தது

முல்லைத்தீவு, ஒக.31

முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமற்போனோரின் உறவினர்களை நேற்றுமுன்தினம் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர். மக்களின் போராட்டம் தொடர்பாக அரசு என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றது என் பது தொடர்பாகவும் அவர்கள் கேட்டறிந்தனர்.

இறுதி யுத்தத்தின்போது படையினரிடம் சரணடைந்த,படையினரிடம் கையளிக்கப்பட்ட மற்றும் படையினரும் துணை இராணுவக் குழுக்களாலும் பிடித்துச் செல்லப்பட்ட தமது உறவுகள் இருக்கிறார்களா? இல்லையா? அவர்களுக்கு என்ன நடந்தது என ஜனாதிபதி பதில் கூறவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 175 நாளாகவும் தொடர்ந்தது.

தங்களுக்கு ஜனாதிபதியின் பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என காணாமற் போனோரின் உறவினர்கள் உறுதி பட தெரிவித்துள்ளனர். (ம-81)



# 'செக்ஸ்' சாமியார்!

## 'கடவுளின் தூதன் இல்லை; நான் கடவுள்' ராம் ரஹீம் சிங்

ஆசிரமத்தில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள்... பாபாஜி தன் அறைக்கு அழைத்தார். இதுவரை தூரத்தில் நின்று பார்த்த கடவுளை, மிக அருகில் நெருங்கிப் பார்க்கப்போகிறோம் என்ற பரவசத்தோடு போனேன். அறையில் தன் படுக்கையில் பாபாஜி இருந்தார். அவர் கையில் ரிமோட். ரி.வியில் நீலப்படம் (ப்ளூஃபிலிம்) ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்தபடி கிறக்கத்தில் இருந்த அவர் அருகே ஒரு துப்பாக்கி பளபளத்தது. எனக்கு பக்தி போய், பயமும் பதற்றமும் வந்தது. இவர் இவ்வளவு கேவலமான மனிதரா?

என்னைப் பக்கத்தில் உட்காரச் சொன்ன அவர், ''நீ இங்கு சேர்ந்த போதே, எல்லாவற்றையும் ஆசிரமத்துக்கு அர்ப்பணித்துவிட்டாய். எனவே, உன் உடல் என்னுடையது. நான் அதை அடையப் போகிறேன்'' என்றார். நான் எதிர்த்தபோது, ''உன்னை இங்கேயே சுட்டுக்கொன்று புதைத்தாலும் கேட்க நாதியில்லை. கடவுளை யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள். உன் குடும்பமே இங்கு இருக்கிறது. அவர்களைக் கொன்றுவிடுவேன். என்னை எதிர்த்தவர்கள் அத்தனை பேரும் காணாமற் போய்விட்டார்கள். மாநில முதல்வர்களும் அமைச்சர்களும் என் காலடியில் விழுந்து கிடக்கிறார்கள்'' என்றார்.

''மிரட்டி என்மீது பலமுறை பாலியல் வன்முறை நிகழ்த்தியது போலவே, பல பெண்களையும் சிதைத்திருக்கிறார் அவர்...'' - தேரா சச்சா சவுதா அமைப்பில் இருந்த ஒரு பெண், கடந்த 2002-ம் ஆண்டில், அப்போதைய பிரதமர் வாஜ்பாய்க்கு எழுதிய இந்தக் கடிதம்தான், இப்போது ஹுசூர் மகராஜ் குர்மீத் ராம் ரஹீம் சிங்குக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறது.

'தேரா சச்சா சவுதா' என்றால் 'உண்மையின் உறைவிடமான ஆசிரமம்' என அர்த்தம்.

### 6 கோடி பக்தர்கள்

இங்கிருந்து வெளியாகியுள்ள உண்மை, நம்மை உறைய வைத்திருக்கிறது. அரியானாவின் சிர்சா நகரைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பில் சுமார் 6 கோடி பக்தர்கள் இருக்கின்றனர் எனச் சொல் லப்படுகிறது.

மத்திய அரசு வழங்கிய Z ப்ளஸ் கமாண்டோ பாதுகாப்புடன், 308 கார்களில் ஊர்வலமாக பஞ்சகுலா நீதிமன்றத்துக்கு வந்த ராம் ரஹீமைப் பார்த்து, 'நீங்கள் குற்றவாளி' எனச் சொன்னார், சி.பி.ஐ நீதிமன்ற நீதிபதி ஜஸ்தீப் சிங். அதைத் தொடர்ந்து வெடித்த கலவரத்தில் 38 பேர் இறந்திருக்கிறார்கள்.

### சகலகலாவல்லவன்

ராம் ரஹீமைக் கடவுளாகவே வழிபடுகிறார்கள். துறவி, கொடை வள்ளல், பாடகர், விளையாட்டு வீரர், நடிகர், இயக்குநர், எழுத்தாளர், கவிஞர், ஒளிப்பதிவாளர் என சகலகலா வல்லவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் ராம் ரஹீமுக்கு இப்போது வயது 50. ராஜஸ்தான் மாநிலம் கங்கா நகர் மாவட்டத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர், கடவுளின் தூதராகவும், கடவுளாகவும் மாறிய கதை சுவாரசியமானது.


சீக்கியர்கள் மத்தியில் 'தேரா' வழிபாடு பிரபலம். ஜாட் மற்றும் காட்ரி சீக்கியர்களே பெரும்பாலான குருத்வாராக்களை ஆக்கிரமித்திருக்க, தலித் மற்றும் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த சீக்கியர்களுக்கு இங்கு மரியாதை கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் 'தேரா'க்களில் தஞ்சமடைகிறார்கள். தேரா என்றால் 'ஆசிரமம்'. பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் இப்படி நூற்றுக்கணக்கான தேராக்கள் உள்ளன. ஒவ்வொரு தேராவிலும் சாமியார்கள் மக்களுக்கு ஆசி வழங்குவார்கள். இவற்றில் இணைவது ஒருவித அடையாளத்தையும் மரியாதையையும் தருவதால், 'தேரா வழிபாடு' அங்கு பெருகியுள்ளது.

### முரட்டு சிநேகிதர்கள்

தேரா சச்சா சவுதா இப்படி ஓர் எளிய அமைப்பாகவே இருந்தது. ராம் ரஹீமின் அப்பா, இதன் பக்தர். அதனால் மகனையும் அழைத்துச் செல்வார். சிறு வயதிலேயே ராம் ரஹீமையும் இங்கு சீடராக்கினார். இளமையில் 'பிளேபாயாக' இருந்த ராம் ரஹீமுக்கு முரட்டு சிநேகிதர்கள் நிறைய. அதில் சில காலிஸ்தான் தீவிரவாதிகளும் அடக்கம். தேரா சச்சாவின் தலைவராக இருந்த ஷா சத்னம் ஓய்வுபெறத் தீர்மானித்த போது, ராம் ரஹீமுக்கு 23 வயது.

அடுத்து அந்தப் பதவிக்கு வரக்கூடியவர்கள் என ஆசிரமத்தில் பட்டியலபட்ட மூன்று பேரில், ராம் ரஹீம் பெயர் இல்லை. அவரின் முரட்டு சிநேகிதர்கள் துப்பாக்கியோடு களத்தில் இறங்க, மூவரும் மிரண்டு ஒதுங்கினார்கள். இப்படித்தான் தலைமைப் பதவிக்கு வந்தார் ராம் ரஹீம்.

அதன்பின் இந்த அமைப்பு அசுர வேகத்தில் வளர்ந்தது. மருத்துவமனைகள், பள்ளிகள் என அடுத்தடுத்து அவர் நிறுவனங்களைத் தொடங்க, தேரா சச்சா பிரமாண்டமாக வளர்ந்தது. இந்த அமைப்பின் தலைமையகம் என்பது சுமார் 700 ஏக்கர் பரப்பில் இருக்கும் ஒரு குட்டி நகரம். உள்ளேயே சினிமா தியேட்டர், பெற்றோல் நிலையம், விளையாட்டு ஸ்டேடியம் என சகலமும் இருக்கின்றன. ஆயுதம் ஏந்திய காவலர்கள் இதைப் பாதுகாக்கிறார்கள். கிட்டத்தட்ட ராம் ரஹீமின் தனிப்பட்ட பொலிஸ் இவர்கள்! அமைப்பு



வளரும்போது, தன் இமேஜையும் வளர்த்துக்கொண்டார். 'எந்த டாக்டராலும் குணப்படுத்த முடியாத நோயையும் தன் சக்தியால் குணப்படுத்துவார்' என்று சொல்லி இவரைக் கடவுளாகக் காட்டினார்கள் அடிவருடிகள்.

### குகையில் ராம் ரஹீம்!

ஆசிரமத்தின் மையமான இடத்தில் ராம் ரஹீமின் குகை இருக்கிறது. இதைப் பாதுகாப்பது முழுக்க முழுக்க இளம் பெண்களே! இதற்கு மூன்று வழிகள் உண்டு. இதில் ஒரு வழி, ஆசிரமப் பெண்கள் தங்கியிருக்கும் ஹொஸ்டலில் போய் முடியும். அந்த வழியாகவே பெண்கள் இவரின் அறைக்கு அழைத்து வரப்படுவார்கள். '' நான் கடவுள். உன் பாவங்களை நீக்கிப் புனிதப்படுத்துவதற்காகவே உன்னோடு உறவு கொள்கிறேன்''. என அந்த அபலைப் பெண்களிடம் சொல்வார். அந்தப்பெண்களின் குடும்பமே சாமியாரின் வெறித்தனமான சீடர்களாக இருப்பதால், அவர்களின் கூக்குரல் எடுபடாது. '' கடவுளைப் போய் குறை சொல்கிறாயா?'' என பெற்றோரே திட்டினால், ஒரு பெண் என்ன செய்ய முடியும்?

### சி.பி.ஐ. விசாரணை

பொறுக்க முடியாமல் ஒரு பெண், தன் பெயரைக் குறிப்பிடாமல் பிரதமருக்குக் கடிதம் எழுதி, அதன் நகல்களை எல்லோருக்கும் அனுப்பினார். பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்றம் அந்த அநாமதேயக் கடிதத்தை ஏற்று சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட்டது.

தேரா சச்சா அமைப்பில் ஏற்கெனவே இருந்த சுமார் 130 பெண்களைத் தேடிப் பிடித்து, ''பலரும் பாதிக்கப்பட்டது உண்மை'' என்பதை உணர்ந்தது சி.பி.ஐ. ஆனால், பல பெண்களுக்குத் திருமணமாகியிருந்தது. ''உண்மையைச் சொன்னால் வாழ்க்கை போகும்'' என பயந்தார்கள். சிலரோ, ''அது கொலைகாரக் கும்பல். அவர்களை எதிர்த்தால் கொன்றுவிடுவார்கள்'' என்றனர். அப்படிச் சிலர் கொல்லப்பட்ட சம்பவங்களும் உண்டு. எல்லாவற்றையும் தாண்டி, இரண்டு பெண்கள் உறுதியாகக் கொடுத்த வாக்குமூலமே, ராம் ரஹீமைக் கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்தியிருக்கிறது.

### திருமணமும் செய்து 3 பிள்ளைகள் வேறு

ஹர்ஜீத் கவுர் என்ற பெண்மணியைத் திருமணம் செய்துகொண்டார் ராம் ரஹீம். இரண்டு பெண்கள், ஒரு பையன் என மூன்று வாரிசுகள். அவரின் மருமகள், பஞ்சாப் காங்கிரஸ் எம்.எல்.ஏ ஒருவரின் மகள். கடந்த 2007 பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸுக்கு ஆதரவளித்த ராம் ரஹீம், 2014 ஹரியானா சட்டமன்றத் தேர்தலில் பி.ஜே.பி-க்கு ஆதரவளித்தார்.

ஆசிரமத்தில் எல்லா பெண்களுமே அவரை 'அப்பா' என்றுதான் அழைப்பார்கள். தன் சொந்த மகள்களுக்குப் பாசமுள்ள அப்பாவாக இருந்த அவர், பல பெண்களுக்கு சாத்தானாக இருந்திருக்கிறார்.★

நன்றி - விகடன்

## 20 ஆண்டு சிறைத் தண்டனை: சிறையில் உணவு உண்ண மறுப்பு!

பாலியல் வன்புணர்வு வழக்கில் 20 ஆண்டு சிறை தண்டனை அறிவிக்கப்பட்ட குர்மீத் சிங் சிறையில் இரவு உணவை சாப்பிடவில்லை. நேற்று முன்தினம் காலையிலும் பால் மட்டும் குடித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியானா, பஞ்சாப் மாநிலங்களில் உள்ள 'தேரா சச்சா சவுதா' மத அமைப்பின் தலைவர் குர்மீத்ராம் ரகீம் சிங் (வயது 50) மீது அந்த அமைப்பை சேர்ந்த 2 பெண்களை வன்புணர்வு புரிந்ததாக 2002ஆம் ஆண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகளை விசாரணை நடத்திய அரியானாவின் பஞ்சகுலாவில் உள்ள சி.பி.ஐ. நீதிமன்று கடந்த 25ஆம் திகதி குர்மீத் சிங் குற்றவாளி என்று தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து அவர் ரோடக் மாவட்ட சுனாரியா சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த அவரது ஆதரவாளர்கள் அரியானா, பஞ்சாப் மாநிலங்களில் வன்முறையில் ஈடுபட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**ட்ரம்ப் நிர்வாகம் அதன் பொறுப்பற்ற தன்மையோடு, வட கொரியாவுக்கு எதிராக ஒரு போரைக் கட்டவிழ்த்து விடக் கூடிய அலட்சியத்துடன் மற்றும் அவமரியாதையுடன் முன்நகர்ந்து கொண்டிருக்கிறது.**



ட்ரம்ப் நிர்வாகம் அதன் பொறுப்பற்றத்தன்மையோடு, வட கொரியாவுக்கு எதிராக ஒரு போரைக் கட்டவிழ்த்து விடக்கூடிய அலட்சியத்துடன் மற்றும் அவமரியாதையுடன் முன்நகர்ந்து கொண்டிருக்கிறது.

வடக்கு-தெற்கு எல்லையின் இரு தரப்பிலும் மில்லியன் கணக்கான உயிர்களை விலை கொடுத்த, 1950-1953 கொரிய போரைப் போலில்லாமல், ஒரு புதிய மோதலானது கொரிய தீபகற்பத்திற்குள்ளேயே மட்டுப்பட்டு இருக்குமென கருதவியலாது.

அணுஆயுத போர் அச்சுறுத்தல் வெறுமனே வெள்ளை மாளிகையில் உள்ள ஒரு பாசிசவாத பைத்தியக்காரரின் விளைவல்ல, மாறாக இது அமெரிக்க மற்றும் உலகளாவிய முதலாளித்துவத்தின் ஆழ்ந்த பொருளாதார நெருக்கடியால் எரியூட்டப்பட்ட அளப்பரிய புவி-அரசியல் பதற்றங்களில் இருந்து எழுகின்றது. அமெரிக்காவின் உலகளாவிய மேலாதிக்கத்திற்கு பிரதான தடையாகக் கருதப்படும் சீனாவுக்கு சவால் விடுக்க, அவசியமானால் அதனுடன் போருக்குச் செல்ல, அமெரிக்காவிற்கு அழுத்தமளித்து வரும் வொஷிங்டனில் உள்ள இராணுவ மற்றும் அரசியல் உயரடுக்கின் சக்திவாய்ந்த பிரிவுகளால் ட்ரம்ப் ஆதரிக்கப்பட்டுள்ளார்.



வட கொரியாவுக்கு எதிரான போருக்கு அடித்தளம் ஒபாமா நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்டது. அது சீனாவுக்கு எதிராக அதன் ''ஆசிய முன்னிலையின்'' பாகமாக இந்தோ-பசுபிக் எங்கிலும் மிகப்பெரியளவில் இராணுவ ஆயத்தப்படுத்தலை அங்கீகரித்தது.

வொஷிங்டன் அதன் வரலாற்று பொருளாதார வீழ்ச்சியைக் கடந்து வருவதற்கு அதன் இராணுவ பலத்தைப் பிரயோகிக்க முனைந்த நிலையில், மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா மற்றும் மத்திய ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒரு கால் நூற்றாண்டு கால தொடர்ச்சியான போர்களால் தயாரிக்கப்பட்ட அரசியல் சூழலின் விளைவே, இப்போதைய இந்த நெருக்கடியாகும். அமெரிக்க ஆளும் வட்டாரங்களின் பிரச்சினைகள் அனைத்தும் சர்வதேச அரங்கில் இராணுவ நடவடிக்கை மூலமாகத் தீர்க்க முடியும் என்பது, அமெரிக்க ஆளும் வட்டாரங்களின் நடைமுறையளவிலான நம்பிக்கை சாசனமாக மாறியுள்ளது.

**வட கொரியாவுக்கு எதிரான போருக்கு அடித்தளம் ஒபாமா நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்டது. அது சீனாவுக்கு எதிராக அதன் ''ஆசிய முன்னிலையின்'' பாகமாக இந்தோ-பசுபிக் எங்கிலும் மிகப்பெரியளவில் இராணுவ ஆயத்தப்படுத்தலை அங்கீகரித்தது.**



அமெரிக்க இராணுவம், அதன் விமானப்படை மற்றும் கப்பற்படையின் 60 சதவீதத்துடன், ஆசியாவில் இப்போது அதன் அதிநவீன ஆயுதங்களை நிலைநிறுத்தி உள்ளது மற்றும் அப்பிராந்தியம் எங்கிலும் புதிய இராணுவ தளங்களுக்கான உடன்படிக்கைகளைப் பெற்றுள்ளது.

தென் கொரியாவில் இருந்தும் அத்துடன் அதன் ஜப்பான் மற்றும் குவாம் இராணுவத்தளங்களின் பல படைப் பிரிவுகளில் இருந்தும் 28,000 இற்கும் அதிகமான விமானப்படை, கடற்படை, கப்பற்படை மற்றும் சிறப்பு நடவடிக்கை படையினரை பென்டகனால் உடனடியாக அழைத்துக் கொள்ள முடியும். அனைத்திற்கும் மேலாக, வட கொரியாவுடனான ஒரு



போர் சம்பவத்தில், அமெரிக்கா அதன் 625,000 சிப்பாய்கள் மற்றும் காத்திருப் போர் பட்டியலில் உள்ள 3,100,000 பேர் ஆகியோருடன் சேர்ந்து, தென் கொரிய இராணுவம் மீது செயற்படுத்தும் கட்டுப்பாட்டையும் ஏற்கக்கூடும்.

கொரிய தீபகற்பம் மீதான எந்த வொரு போரும் பெரும் அபாயங்களைச் சீனாவிற்கு மட்டுமல்ல, மாறாக ரஷ்யாவுக்கும் நிலைநிறுத்துகிறது.

ஏனெனில் இவ்விரு நாடுகளுமே வட கொரியாவுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றன. ட்ரம்ப் நிர்வாகத்தின் குற்றகரமான தான்தோன்றித்தனம், கடந்த நூற்றாண்டு முழுவதிலும் ஓர் அபாயகரமான வெடிப்புப் புள்ளியாக இருந்துள்ள ஒரு இடத்தில், போரைத் தொடங்குவதற்கு அது தயாராக உள்ளது என்ற உண்மையால் அடிக்கோடிடப்படுகிறது.

சீனா மற்றும் ரஷ்யாவின் சொந்த பாதுகாப்பை ஒட்டுமொத்தமாக பலவீனப்படுத்தும் வகையில் அவற்றின் பின்புறத்தில் அமெரிக்கா ஓர் போர் வெடிப்பை தொடங்குகையில் அவை வெறுமனே அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் என்று கருத முடியாது. வட கொரியா மீது கடுமையான புதிய தடையாணைகளுக்கு ஐ.நா. பாதுகாப்பு குழுவில் பெய்ஜிங்கும் மாஸ்கோவும் சமீபத்தில் தான் வாக்களித்திருந்தன என்ற நிலையில், இந்த வாரம் ட்ரம்பின் போர்நாடும் வேட்கையை அவை ஒரு காட்டிக்கொடுப்பாக மட்டுமே கருதும்.

முதல் கொரிய போரில் அமெரிக்க துருப்புகள் சீனாவின் எல்லையை நெருங்கிய போது, அது அப்போரில் தலையீடு செய்தது. ஆகவே, மீண்டும் அது அதையே செய்யக்கூடும். அரசுக்குச் சொந்தமான குளோபல் டைம்ஸ் இதழில் வெளியான ஒரு தலையங்கம், சீன ஆட்சியின் மிகவும் இராணுவவாத பிரிவுகளைப் பிரதிபலிக்கும் வகையில், பெய்ஜிங் அதன் நலன்களைப் பாதுகாக்க ''உறுதியான கரத்துடன் விடையிறுக்க'' வேண்டியிருப்பதாக வலியுறுத்தியது. முதல் தாக்குதலை வட கொரியா தொடங்கினால் சீனா நடுநிலையோடு இருக்க வேண்டுமென அது வலியுறுத்திய போதினும், அமெரிக்காவும் தென் கொரியாவும் தாக்குதல்களை நடத்தி, வட கொரிய ஆட்சியைத் தூக்கியெறிய முயன்றால் அவர்கள் அவ்வாறு செய்வதை சீன தடுக்கும் என்று எச்சரித்தது.

கொரிய தீபகற்பத்தின் இந்த உடனடி நெருக்கடியை, குறைந்தபட்சம் தற்காலிகமாகவாவது தணிப்பதற்கான ஒரு வழியும் பரிசீலிக்கப்படும் என்பதை ஒதுக்கிவிட முடியாது. அணுஆயுத பயன்பாடு மீதான முந்தைய புரிந்துணர்வுகளுக்கு அமெரிக்கா இனியும் கட்டுப்படாது என்பதையும், அது அணுஆயுத போர் தொடுக்க விரும்புகிறது என்பதையும் அது தெளிவுபடுத்தி விட்டது-இந்த விடயத்தில் ஒரு வறிய, பின்தங்கிய மற்றும் பலவீனமான ஒரு இராணுவ எதிரிக்கு எதிராக நடக்கும்.

உலகெங்கிலும், போட்டியாளர்களும் கூட்டாளிகளும் அவர்களின் அத்தியாவசிய நலன்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கேற்ப, அவர்கள் தமது மூலோபாய மற்றும் இராணுவ திட்டமிடலை மாற்ற நிர்பந்திக்கப்படுவார்கள்.

இச்சூழலில், மனிதயினம் இப்போது முகங்கொடுக்கும் இந்த நெருக்கடிக்கு, அமெரிக்காவிலும், ஆசியா மற்றும் சர்வதேச அளவிலும் தொழிலாள வர்க்கத்தின் பாகமாக அரசியல் புரிதலும் தயாரிப்பும் இல்லாமல் இருப்பதுதான் மிகப்பெரிய அபாயமாகும்.

(கேள்வி தொடரும்)

# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



81




## அத்தியாயம் - V

### இந்தியாவில் தலைமறைவு வாழ்க்கை

எந்தப் பெரிய முரண்பாடு! கடைசியாக இந்தியாவிலேயே நாம் தஞ்சமடைய வேண்டியதாயிற்று, அதுதவிர, தமிழர் தாயகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் போர் நடத்திக்கொண்டு இருக்க பெருந்தொகையான புலிப் போராளிகள் தமிழ்நாட்டிலேயே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால், தமிழ்நாடு அரசியல்வாதிகளுடைய உதவியும் பொது மக்களின் ஆதரவும் விடுதலைப் புலிகளுக்குவி கிடைத்த முந்திய நாள்களில் இருந்ததற்கு நேர்மாறான நிலையிலேயே அவர்கள் இப்போது வாழ்ந்தார்கள். இப்பொழுது காவல்துறையினரும் புலனாய்வுப் பிரிவினதும் கண் அவர்கள் மீது இருந்தது. எப்போதும் கைது செய்யப்படலாம் என்ற அச்சமும் நிலவியது. எமது போராளிகளும் எப்போதும் விழிப்பாகவே இருந்தார்கள். அதிகாரிகள் எந்த வேளையும் தம்மீது பாய்ந்து, கைது செய்து தடுப்புக்காவலில் இடலாம் என்று எதிர்பார்த்தார்கள். 1988 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் மாநிலம் முழுவதும் சுற்றி வளைப்பு நடத்தி, புலிகளைத் தடுப்புக் காவலில் இட்டமையை அவர்கள் மறக்கவில்லை. ஆனால், எம்மைப் பொறுத்த வரையிலே இந்திய மக்கள் மட்டிலும் வைத்திருக்கும் மதிப்பு வேறு. எமது தாயகத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் இந்தியா மீதான எமது மரியாதை உணர்வை மாற்றவில்லை.

வேதாரண்யத்தை நாம் அடைந்ததும், எமது ஆதரவாளர்களின் வீடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு உள்ளூர் காவல்துறையினரிடமிருந்தும் சுங்க அதிகாரிகளிடம் இருந்தும் அந்த மக்கள் எம்மைக் காப்பாற்றினார்கள். வேதாரணியம் ஒரு சிறிய பட்டினம். உள்ளூர் அதிகாரிகளுக்கு இந்த மக்களின் வீடுகள் நல்ல பழக்கம். ஆகவே, எம்மைக் கண்டுபிடிப்பதும் மிகச் சுலபம். ஆகவே, நாம் அங்கிருந்து புறப்படுவது நல்லது என்று அறிவுரை கிடைத்தது. தமிழ்நாட்டில் பாலாவை நன்கு தெரியும். இனி எனது நிறமும் எம்மைக் காட்டிக் கொடுத்துவிடும். ஆகவே, அந்த மாநிலத்தை விட்டு வெளியேறி பாலாவை நன்கு தெரியாத கர்நாடக தலைநகரான பெங்களூரில் தலைமறைவாக வாழ்வது என்று தீர்மானித்தோம். எனவே, திருச்சியில் உள்ள ஒரு பாதுகாப்பான வீட்டில் சிறிது காலம் தங்கிவிட்டு,பெங்களூர் சென்று ஜெயநகரில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டோம்.


பெங்களூரில்,நாம்நன்குகாலூன்றிய பின் தமிழ்நாட்டில் தலைமறைவாக வாழ்ந்த சில இயக்கப்போராளிகள் பெங்களூர் வந்து எம்மோடு சேர்ந்து கொள்ளத் தீர்மானித்தார்கள். பெங்களூரில் ஆரம்ப நாள்களில் அரச அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்காது இருக்க பெருமுயற்சி மேற்கொண்டேன். கூடிய வரையும் வீட்டுக்குள்ளே எனது பணிகளை முடக்கிக் கொண்டேன். ஆனால், நாள்கள் செல்ல நிலைமை தாங்க முடியாததாகியது. வீட்டுக்குள் ஒரு கைதி போல் அடைந்து கிடந்தேன். இது எனது பொறுமையைச் சோதித்தது. அடங்கி இருப்பதை முற்றாகக் கைவிட்டு பாலாவும் நானும் நகரத்தைச் சுற்றி வரவும் கடைக்கும் பூங்காவுக்கும் போகவும் தீர்மானித்தோம். தமிழீழத்திலும் இந்தியாவிலும் இடம்பெறும் சம்பவங்களை ஊன்றிப் படித்தோம். போர் நிறுத்தம்; போர் முடிவுக்கு வரும்; நாம் யாழ்ப்பாணம் திரும்பலாம் என்று நம்பியிருந்தோம். ஆனால், அது நடக்கவில்லை. போர் விரைவிலே முடிவதற்கு வாய்ப்பில்லை என்று தெரிந்ததும் பிரபாகரனிடமிருந்து செய்தி வந்தது. இந்தியாவில் இருந்து வெளியேறி லண்டன் செல்ல வேண்டும் என்பதே அந்தச் செய்தி. புலிகளுக்கும் இந்தியாவுக்கும் நடைபெறும் போரில் எத்தகைய நிலைமை உண்டாகி இருக்கிறது என்பதையும் அதில் இருந்து உருவான அரசியல், இராணுவ நிகழ்வுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதையும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு நாம் தெரிவிக்கலாம் என்றும் அந்தச் செய்தி விதப்புரை புரிந்திருந்தது. இந்தியாவை விட்டு நாம் வெளியேறலாம் என்று தீர்மானம் வந்தாலும், வெவ்வேறு இந்தியப் புலனாய்வுப் பிரிவுகளால் தடுக்கப்படாது நாம் இந்தியாவை விட்டு எவ்வாறு வெளியேறுவது என்பது எமக்குப் புதிராக அமைந்தது. நாம் வெளியேறுவதற்குக் கிடைத்த ஒரே வழி. சென்னை அனைத்துலக விமான நிலையம் மூலமாகவே வெளியேறும்போது விமான நிலையத்தில் வைத்து நாம் கைதுசெய்யப்படாது இந்தியாவில் இருந்து நாம் வெளியேறும் ஏற்பாடுகளைப் புரிவதற்காக இரவு வேளையில் சென்னை திரும்பி, நண்பர் ஒருவருடன் தங்கினோம்.

> *எமது கடவுச் சீட்டுகளில் இந்தியாவில் தங்கியிருக்கும் காலம் காலாவதியாகி பல ஆண்டுகள் கழிந்திருந்தன. குறித்த நேரத்தில், யாரும் கவனிக்காதவாறு, சீட்டுக் கடவைக்குச் சென்றோம். வேறு பெயரிலேயே எமது பயணச் சீட்டுகள் பதியப்பட்டிருந்தன. சீட்டுக்களை பார்வையிட்ட அதிகாரி, 'பயணம் நல்ல படியாக அமையட்டும் பாலாசிங்கம் அவர்களே' என்று கூறி, அவற்றை எம்மிடம் திருப்பித் தந்தபோது, ஒரு கணம் அதிர்ந்து போனோம்.*

கிட்டு, வீட்டுக் காவலில் சென்னையில் இருந்தார். அவருடைய வதிவிடத்தைச் சுற்றி காவல் அதிகாரிகள் பலர் 24 மணி நேரமும் காவலுக்காக நிறுத்தப்பட்டிருந்தார்கள். எமது பழைய நண்பரும் இயக்கத்தின் தமிழ் நாடு அரசியல் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவருமான கிட்டுவை, நாம் லண்டன் புறப்படுவதற்கு முன் பார்த்தாக வேண்டும் என்று தீர்மானித்தோம். இரண்டடுக்கு வீடு ஒன்றில் மேல்மாடியில் கிட்டு வசித்து வந்தார். கீழ்த் தட்டில் காவல் துறையினர் தரித்திருந்தார்கள். நாம் அவரைப் பார்க்க விரும்பும் தகவல் கிட்டுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. புதுப்புது சிந்தனைகளுக்குப் பஞ்சமில்லாத கிட்டு, காவலில் நிற்கும் காவல் அதிகாரிகளின் கவனத்தைத் திசை திருப்பத் திட்டம் ஒன்றை வகுத்தார். குறித்த இரவு இரண்டு பிரபலமான தமிழ் படங்களைத் தருவித்து காவல் அதிகாரிகளுக்கு ஒரு வீடியோ காட்சிக்கு ஏற்பாடு செய்தார். வாயிலில் காவலுக்கு நிற்கும் காவலர் உட்பட அனைத்து காவல் அதிகாரிகளும் வைத்த கண் வாங்காது படத்தில் மெய்ம்மறந்திருக்க, முட்கம்பி வேலியூடாக நாம் சென்று, பின்படிகளால் மேல்மாடிக்குச் சென்றோம். தமிழ் நாடு காவல் துறையின் வலையில் சிக்காது கிட்டுவை நாம் சந்தித்தோம். சென்னையில் தலைமறைவாக சொற்ப காலம் இருந்தபோது இந்தியப் புலனாய்வுத் துறை உயர் அதிகாரி ஒருவரையும் சந்தித்தோம். நாம் இந்தியாவில் இருந்தபோது பாலாவுக்கு நன்கு அறிமுகமாகி இருந்தவர் இவர். முக்கிய கடைசி நாள்களில் சென்னையில் எமது நடமாட்டத்தைக் குறித்த சில பகுதிகளில் மட்டும் வைத்திருக்குமாறும் தமிழ் நாடு கியூப் பிரிவினரின் பார்வையில் தட்டுப்படாதவாறு பார்த்துக்கொள்ளுமாறும் அவர் அறிவுரை வழங்கினார். இந்தியாவைவிட்டு வெளியேறும் திட்டத்தை நாம் அவரிடம் கூறினோம். பயண வேளையின் போது விமான நிலையத்தில் பயணச் சீட்டு சோதிக்கப்படும். குடிவரவுக் கடவையில் தாம் நிற்பார் என்றும் அவர் தெரிவித்தார். எமது கடவுச் சீட்டுகளில் இந்தியாவில் தங்கியிருக்கும் காலம் காலாவதியாகி பல ஆண்டுகள் கழிந்திருந்தன. குறித்த நேரத்தில், யாரும் கவனிக்காதவாறு, சீட்டுக் கடவைக்குச் சென்றோம். வேறு பெயரிலேயே எமது பயணச் சீட்டுகள் பதியப்பட்டிருந்தன. சீட்டுக்களை பார்வையிட்ட அதிகாரி, 'பயணம் நல்ல படியாக அமையட்டும் பாலாசிங்கம் அவர்களே' என்று கூறி, அவற்றை எம்மிடம் திருப்பித் தந்தபோது, ஒரு கணம் அதிர்ந்து போனோம். உள்ளே சென்று விட்டோம். குடிவரவுக் கடவை ஒன்றே பாக்கி. கடமை உணர்வு மிக்கவர் போன்ற தோற்றமுடைய குடிவரவு அதிகாரி ஒருவரிடம் எமது கடவைச் சீட்டுக்களை கையளித்தோம். அவர் அவற்றைப் பக்கம் பக்கமாக கூர்மையாக புரட்டிப் பார்த்தார். எம்மையும் உற்றுப் பார்த்தார். பின்னர் பின்னணியில் நிற்கும் ஓர் உருவத்தை திரும்பிப் பார்த்தார். அவரிடம் இருந்து ஒரு தலையசைப்பு கிடைத்தது. கடவைச் சீட்டுக்களை துரிதமாக மூடியவர், எம்மிடம் அவற்றைத் தந்து உள்ளே செல்லுமாறு கையசைத்தார். மங்கலான பகுதியில், பின்னே நின்று தீர்மானம் செய்த அந்த உருவம் தமிழரான அந்தப் புலனாய்வு அதிகாரியே. சிறிது நேரத்தில் லண்டனை நோக்கி எமது விமானம் வானத்தில் பறந்தது. எமது வாழ்க்கை சகட ஓட்டம் ஒரு முழுச் சுற்று சுற்றி வந்திருந்தது.

(தொடரும்...)

# இன்றைய ஆவணி மூல நன்னாளில் சிவனை வழிபட்டு நல்வாழ்வு பெற்றிடுவோம்!



இன்று ஆவணி மூல நன்னாள். காட்டிலுள்ள நரிகளை எல்லாம் பரிகளாக மாற்றி இறைவன்திருவிளையாடல் புரிந்த நன்னாள். மதுரை மாநகரமே அல்லோலகல்லோலப்பட்டு மக்கள் அவலப்பட்டு அங்கலாய்த்த அந்தக் கதை திருவாதவூரடிகள் புராணத் திலே மிகவும் அழகாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

குதிரைகள் வாங்கி வரும்படி பாண்டிய மன்னவன் கொடுத்த பொன்னையெல்லாம் இறை திருப் பணிக்காகச்செலவிட்ட மந்திரியாகிய தமது அடியவர் திருவாதவூரடிகளைக் காப்பாற்றுவதற்காக சிவபெருமான் செய்த திருவிளையாடல் இது. ஆவணி மூல நன்னாளில் குதிரைகள் வரும் என்று சொல்லும்படி தென்னவன் பிரமராயர் எனப்படும் மந்திரியாக இருந்த திருவாதவூரருக்கு இறைவன் கூறியிருந்தான்.

இன்று ஆவணி மூல நன்னாள்

> உண்மையான அடியவராக பக்தி செய்து வணங்கினால் சிவபெருமான் தாமாகவே இறங்கி வந்து திருவருள் புரிவான்





"சொன்னசொல் நாணயத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்பதற்காகச் சிவபெருமான் குதிரைக் காரனாக மாறுவேடம் தாங்கி பாண்டிய மன்னனிடம் வந்து நல்ல இலட்சணம் நிறைந்த குதிரைகளைக் கொண்டு வந்து கொடுத்தாராம். அதைக் கண்ணுற்ற பாண்டியன் மந்திரியாரை வெகுவாகப் பாராட்டினான்.

ஆனால், அன்றிரவு நடுநிசி நேரம். பாண்டிய மன்னனின் லாயத்திலே நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டது.

சிவபெருமான் என்ன செய்தார் தெரியுமா? காட்டில் திரிந்த நரிகளைப் பிடித்துக் குதிரைகளாக மாற்றிக் கொண்டு வந்து கொடுத்து விட்டு மீண்டும் அவற்றை நரிகளாகவே மாற்றி விட்டாராம். அதனால் ஏற்கனவே லாயத்தில் நின்றிருந்த உண்மையான குதிரைகளையும் நரிகள் கடித்துக் குதறி விட்டனவாம். நாட்டு மக்களையும் கடித்துத் துன்புறுத்தினவாம்.

விடயமறிந்த பாண்டியன் மந்திரியார் தம்மை நன்றாக ஏமாற்றி விட்டார் எனக் கருதி அவரைப் பிடித்துச்சிறையிலிட்டுவருத்தினான். நெற்றி யிலே கல்லை வைத்துச் சித்திரவதை புரிந்தான். இது மதுரையில் நடந்தது.

உண்மையாக வழிபட்டு நின்ற தம்முடைய பக்தனுக்காகச் சிவபெருமான் மேலும் பல திருவிளையாடல்களைச் செய்தார். வைகையாற்றைப் பெருகச் செய்து செம்மனச் செல்விக்காகக் கூலியாளாய் வந்து பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படியும் பட்டாராம்!.

இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? உண்மையான அடியவராகப் பக்தி செய்து வணங்கினால் சிவபெருமான் தாமாகவே இறங்கி வந்து திருவருள் புரிவான் என்பதே.

ஆதலால்-

இன்றைய ஆவணி மூல நன்னாளில் சிவபெருமானை வணங்கி வழிபாடியற்றி சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்று நல்வாழ்வு கிடைக்க நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

தெய்வத் தமிழ்ச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்.

---

## 20 ஆண்டு சிறைத் தண்டனை ...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
வன்முறை மற்றும் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் 38 பேர் பலியானார்கள். 250 இற்கும் மேற்பட்டவர்கள்காயம் அடைந்தனர்.

இந்த வழக்குகளில் சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி நேற்று முன் தினம் தண்டனை விவரங்களை அறிவித்தார். 2 வன்பு ணர்வு வழக்குகளிலும் குர்மீத் சிங்குக்கு தலா 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், தலா 15 லட்சம் ரூபா அபராதமும் விதித்தார். இந்ததண்டனைகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்றும் கூறியதால் குர்மீத் சிங் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

தண்டனை அறிவிக்கப்பட்டதும் குர்மீத் சிங் நீதிமன்ற நூலகத்தில் இருந்து அவரது அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அடைக்கப்பட்டார். தீர்ப்புக்கு பின்னர் குர்மீத் சிங் சிறையில் எவருடனும் பேசவில்லை. தனது அறைக்குள்ளேயே சுற்றிச் சுற்றி நடந்துகொண்டே இருந்தார்.



சிறைக்குள் இரவு உணவையும் அவர் சாப்பிடவில்லை. இரவில் அவ்வப்போது சிறிது தண்ணீர் மட்டுமே குடித்தார். நேற்றுக் காலையும் அவர் பால் மட்டுமே குடித்தார் எனச் சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே குர்மீத் சிங்கின் வாரிசு யார்? என்பதற்கான போட்டி ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இதில் அவரது மகன் ஜஸ்மீத், வளர்ப்பு மகள் ஹனிபிரீத் மற்றும் தேரா அமைப்பின் தலைவி விபாசனா இன்சான் ஆகியோருக்கு இடையே இந்தப் போட்டி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இவர்களில் யார் தேரா அமைப்பின் அடுத்த தலைவர்? என்ற பிரச்சினை எழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

30 வயதுகளில் இருக்கும் குர்மீத் சிங்கின் மகன் ஜஸ்மீத் பஞ்சாப் காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ. ஹர்மிந்தர் சிங்கின் மகளை திருமணம் செய்துள்ளார். ஒருவேளை ஜஸ்மீத் வாரிசாக அறிவிக்கப்பட்டால், அது தேரா அமைப்பின் பாரம்பரியத்தை தகர்ப்பதாக அமையும். அந்த அமைப்பில் தலைவராக இருப்பவரின் குடும்பத்தினர் யாரும் அடுத்த தலைவராக நியமிக்கப்படுவது இல்லை.

குர்மீத் சிங்கின் தேவதை என்று அழைக்கப்படும் ஹனிபிரீத்தும் தேரா அமைப்பின் தலைவராக விரும்புவதாக கூறப்படுகிறது. விபாசனாவிடம் இதுபற்றி கேட்டபோது, 'வாரிசு யார் என்பது பற்றிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆதரவாளர்கள் தங்கள் குரு மீது முழு நம்பிக்கை வைத்துள்ளார்கள். இப்போதைக்கு தேரா அமைப்பின் கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன' என்றார்.

---

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.31

சி.கா.செந்திவேல் எழுதிய "வட்டுக்கோட்டையில் இருந்து மூல்லைத்தீவு வரை" என்ற அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் நகரில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள நிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி சி.சிவசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையை சட்டத்தரணி சோ.தேவராஜாவும் மதிப்பீட்டுரைகளை அரசியல்பொருளாதார ஆய்வாளர் அகிலன் கதிர்காமர், எழுத்தாளரும் சமூக ஆய்வாளருமான சி.கருணாகரன் சமூக விஞ்ஞான செயற்பாட்டாளர் மு.மயூரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (இ)

---

## காந்தி ஜெயந்தி தின கட்டுரைப் போட்டி

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் ஜெயந்தி (ஒக்ரோபர் 2) தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்றை நாடளாவிய ரீதியில் நடத்தவுள்ளது.

ஆரம்பப் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதி சிரேஷ்ட பிரிவு என நான்கு பிரிவுகளாக இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது. (இ)

# அரசு கொண்டுவர முயற்சிக்கும் வரிச் சட்டத்தை அனைவரும் இணைந்து தோற்கடிக்க வேண்டும்!

## மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

கொழும்பு, ஓக. 31

மக்களுக்கு மேலும் சுமையை அதிகரிக்கும் வகையில் அரசு கொண்டுவர முயற்சிக்கும் வரிச் சட்டத்தை சகல மக்களும் இணைந்து தோற்கடிக்க வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் வற் வரியை 15 வீதமாக அதிகரித்த அரசு, அத்துடன் நின்றுவிடாது மேலும் சுமையை அதிகரிக்கும் வகையில் உத்தேச வரிச் சட்ட மூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது என்றும் அந்தக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

புறக்கோட்டை ரயில் நிலைய நுழைவாயிலில் இது தொடர்பில் தெளிவுபடுத்தும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் செயற்திட்டத்தில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, தொழிற்சங்கத் தலைவர் கே.டி. லால்காந்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் மக்கள் மீது சுமையை அதிகரிக்கும் வகையில் கொண்டுவரப்படும் வரிச் சட்ட மூலங்களை எதிர்க்காது சமிக்ஞை விளக்குகள் போன்று செயற்படுகின்றனர் என கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமக்கு வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் கிடைக்கும் போது சபையில் கொண்டுவரப்படும் எந்தவொரு சட்டத்துக்கும் ஆதரவு வழங்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இல்லை. மிக மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்கள் பிரதிநிதிகளே அங்கு இருக்கின்றனர்.

பெரும்பாலானவர்கள் வரப்பிரசாதங்களுக்காக பெயரளவில் உள்ள பொம்மைகளாக இருக்கின்றனர். இவர்களின் ஊடாக மக்களுக்கு நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

உத்தேச வரிச்சட்ட மூலத்தின் ஊடாக வருடாந்தம் ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேலதிகமான வருமானத்தை ஈட்டும் சகலரிடமும் வரி அறவிடப்படவுள்ளது.

இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்ட துறைசார் நிபுணர்களிடம் மாத்திரமே வரி அறவிடப்பட்டதாகவும் ஆகக் கூடியது 24 வீத வரி அறவிடப்படவுள்ளதாகவும் தொழில் புரிபவர்களுக்கு வருடாந்தம் 6 லட்சம் ரூபா வரையான வருமானத்துக்கு வரிவிலக்கு வழங்கப்பட்டிருந்தது.

இவர்கள் வீட்டு கடன் பெற்றிருந்தால் 12 லட்சம் ரூபா வரை வரி விலக்கு இது வரை வழங்கப்பட்டது. எனினும், உத்தேச சட்டமூலத்தில் இந்த விடயம் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்க தலைவர் கே.டி.லால்காந்த மேலும் தெரிவித்துள்ளார்.



# இராணுவ உயரதிகாரிகள் சென்ற வாகனம் அதிவேக நெடுஞ்சாலையில் எரிந்து நாசம்!



கொழும்பு, ஓக. 31

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இராணுவ உயரதிகாரிகள் பயணம் செய்த வாகனம் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமானது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், கொட்டாவ வெளியேற்றப் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமில் இருந்து, பனாகொட இராணுவத் தளத்துக்குச் சென்று கொண்டிருந்த போது இந்த தீ விபத்து ஏற்பட்டது.

இதில் மூன்று இராணுவ அதிகாரிகள் இருந்தனர் என்றும், தீப்பிடித்ததும், அவர்கள் வாகனத்தில் இருந்து குதித்து வெளியேறியமையால், காயங்களின்றி உயிர் தப்பினர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், தீவிபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. இது குறித்த இராணுவ, மற்றும் பொலிஸாரின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தில் நாடுகடந்த தமிழீழ அரசின் செயல் முனைப்பு!



காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு நாடு கடந்த தமிழீழ அரசு முக்கியமான இரண்டு செயல் முனைப்புகளில் இறங்கியுள்ளது.

சர்வதேசவலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோருக்கானதினம்நேற்றுஉலகெங்கும்அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு, நாடுகடந்த தமிழீழ அரசால் கனடாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் இரண்டு செயல் முனைப்பு அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரச படைகளினாலும் அதன் கட்டமைப் புகளினாலும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தனித்த இணையத்தளம் ஒன்றினை நாடு கடந்த தமிழீழ அரசு அறிமுகப்படுத்தவுள்ளது.

இதேவேளை, Oakland Institute For Policy Studies உடன்இணைத்துகூட்டாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள், சமூக அமைப்புகள், செயற்பாட்டாளர்களை நோக்கிய கையெழுத்து இயக்கம் ஒன்றையும் தொடங்கவுள்ளோம் என்றும் நாடுகடந்த தமிழீழஅரசுவிடுத்துள்ளஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்து பிரிவினைவாத அரசியல் தோன்றியுள்ளது!

முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 31

பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்து பிரிவினைவாத அரசியல் வேற்றுமை தோன்றியுள்ளது என தேசிய ஒற்றுமைக்கான பாக்கீர்மாக்கார் நிலையத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் நல்லிணக்கத்திற்குப் பேரபத்தான செயல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எழுத்தாணிக்கான தன்னடக்கம் எனும் நல்லிணக்க நேய கிழக்கு மாகாண ஊடக செயலமர்வின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த சந்தர்ப்பத்திதை நழுவ விடக்கூடாது.

நாட்டில் சுபீட்சத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்து பிரிவினை அரசியல் வேற்றுமைதோன்றியுள்ளதோடு, சந்தேகம், அச்சம் புறந்தள்ளப்பட்டு நிலையான சகவாழ்வும் மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டும்.

கடந்த கால அரசுகள் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தவறியுள்ளன. இந்த நிலையில், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது மக்கள் நம்பிக்கை கொண்டிருந்த போதிலும் அவரும் கடமையைச் சரியாக நிறைவேற்றவில்லை.

எனினும், இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகவும், அனைவரும் ஒன்றுபட்டுள்ள நிலையில், ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வை நோக்கி நகர்கின்ற இன்றைய சந்தர்ப்பத்தை நாம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



(க)

# வடக்கில் இடியுடன் கூடிய மழை!

கொழும்பு, ஓக. 31

நாட்டில் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை அதிகரிக்கக்கூடும் எனவளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையானது இன்று முதல் எதிர்வரும் 2ஆம் திகதி வரை நீடிக்கும் என வளி மண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், மேற்கு, சப்ரகமுவ, வடமேல், மத்திய மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் ஓரளவு மழை பெய்யும் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஊவா, கிழக்கு மற்றும் வட மாகாணங்களில் பல பிரதேசங்களில் பிற்பகல் 2மணியின்பின்னர்மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், அம்பாந்தோட்டை மற்றும் மாதுறுஓயா பகுதிகளில் மணிக்கு சுமார் 40 தொடக்கம் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலமான காற்று வீசக்கூடும்.

இதேவேளை, எதிர்வரும் 6ஆம் திகதி வரை நாட்டின் பல இடங்களில் சூரியன் உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## உ.பி. கோரக்பூர் மருத்துவமனையில் மீண்டும் பெரும் துயரம்:

# 48 மணி நேரத்திதுள் 42 குழந்தைகள் சாவு!

லக்னோ.ஓக.31

உத்தரபிரதேசம் கோரக்பூர் மருத்துவமனையில் கடந்த 48 மணி நேரத்தில் 42 குழந்தைகள் மரணமடைந்துள்ளன. இந்தக் குழந்தைகள் மூளைக் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்களால் உயிரிழந்துள்ளன என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.





உத்தரப்பிரதேசம் கோரக்பூரில் உள்ள பாபா ராகவ் தாஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஒட்சிசன் பற்றாக்குறையால் 70 இற்கும் மேற் பட்ட குழந்தைகள் உயிரிழந்தன.

நாட்டையே உலுக்கிய இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடந்துவருகின்றன.

இந்நிலையில், மேலும், ஒரு துயரமாக அதே மருத்துவமனையில் கடந்த 48 மணி நேரத்தில் 42 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

மூளை அழற்சி, ஒவ்வாமை, நிமோனியா காய்ச்சல், சீழ்பிடிப்பு போன்ற காரணங்களால் தான் குழந்தைகள் உயிரிழந்துள்ளன என மருத்துவமனை முதல்வர் பி.கே.சிங் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் அப்பகுதியில் பெய்த கனமழை காரணமாக மருத்துவமனை வளாகங்கள் தண்ணீரால் மூழ்கின எனவும், அதிகம் பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். என்றாலும் சரியான சிகிச்சை அளிக்க முடியவில்லை என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு மாதத்தில் மட்டும் நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஒரே மருத்துவமனையில் மரணமடைந்துள்ளமை அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

## திருமணத்திற்கு மறுத்தார் காதலன்; தீக்குளித்தாள் 15 வயது சிறுமி!



லக்னோ.ஓக.31

உத்தரப்பிரதேசம் மாநிலம் முசாபர்நகர் மாவட்டத்தில் ஓடிப் போய்திருமணம் செய்து கொள்ள காதலன் மறுத்தமையால் 15 வயது சிறுமி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் முசாபர்நகர் மாவட்டத்தில் உள்ள ஷாபூர் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியும், அப்பகுதியைச் சேர்ந்த 20 வயது வாலிபரும் காதலித்து வந்தனர். இவர்களின் காதலுக்கு சிறுமி வீட்டார் எதிர்ப்புத் தெரிவித்தனர் எனத் தெரிகிறது.

இந்நிலையில், வாலிபரிடம் வீட்டை விட்டு ஓடிப் போய் திருமணம் செய்து கொள்ளலாம் என சிறுமி வற்புறுத்தியுள்ளார். காதலன் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளான். இதனால் மனமுடைந்த சிறுமி நேற்று முன்தினம் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறுமியை தற்கொலைக்கு தூண்டினார் என காதலன் மீது வழக்குபதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சிக்கிம் எல்லையில் இந்திய – சீன படைகள் வாபஸ்!

புதுடில்லி,ஓக.31

சிக்கிம் எல்லையில் டோக்லாம் பகுதியில் இருந்து படைகளைத் திரும்பப் பெறுவதாக இந்தியாவும், சீனாவும் ஒப்புக்கொண்ட முடிவிற்கு பூட்டான் நாடு வரவேற்பு தெரிவித்துள்ளது.

சிக்கிம் எல்லையில் இந்தியா, சீனா, பூட்டான் ஆகிய நாடுகளின் முச்சந்திப்பில் டோக்லாம் என்னும் பகுதி உள்ளது.

இங்கு கடந்த ஜூன் மாதம் இந்தியாவும், சீனாவும் படைகளைக் குவித்தமையால் 70 நாள்களுக்கும் மேலாக போர் பதற்றம் நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரு நாடுகளும் டோக்லாம் பகுதியில் இருந்து படைகளைத் திரும்பப் பெறுவது என ஒப்புக்கொண்டன.

இதையடுத்து இரு தரப்பிலும் படிப்படியாகப் படைகள் வாபஸ் பெறப்பட்டு வருகிறது. இந்தியாவும், சீனாவும் எடுத்துள்ள இந்த முடிவை பூட்டான் நாடு வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், டோக்லாம் பகுதியில் மோதல் போக்கைக் கைவிட்டு இரு நாடுகளும் படைகளைத் திரும்ப பெறுவதற்கு மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தை பூட்டான் வரவேற்கிறது. இதன் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளின் எல்லைப் பகுதியில் அமைதி ஏற்படும் என்று நம்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. (ப)

**பூட்டான் வரவேற்பு**




## நளினியும் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம்!

சென்னை,ஓக.31

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க அனுமதி கோரி வேலூர் சிறையில் உள்ள நளினி சிறைத்துறைக்கு மனு அளித்துள்ளார். கணவர் தொடர் உண்ணாவிரதம் இருக்கும் நிலையில் நானும் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

முருகன் உண்ணாவிரதத்தை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சிறைத்துறையிடம் மனு அளித்தார்.





### முருகன் ஜீவசமாதி

இந்நிலையில் ஜீவசமாதி அடைவதற்காக முருகன் கடந்த 18ஆம் திகதி முதல் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

உண்ணா விரதத்தை கைவிட வேண்டும் என்று சிறைத்துறை அதி காரிகள் கேட்டுக் கொண்ட போதிலும் அவர் தொடர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண் டுள்ளார்.

ஆண்கள் மத்திய சிறையில் உள்ள முருகன், ஜீவசமாதிக்கு அனுமதி வேண்டும் என்று கோரி தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகிறார் இதையொட்டி, அவரது உண்ணாவிரத்தை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து நளினி உண்ணாவிரதத்தை தொடங்கியுள்ளார்.

### முருகனைச் சந்திக்கத் தடை

கணவரை சந்திக்க விதிக்கப்பட்ட தடையை திரும்பப் பெறக் கோரி வரும் நளினியும் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கியுள்ளார். முருகன், தன் உண்ணாவிரதத்தை கைவிடும் வரை நளினியும் உண்ணாவிரதத்தைத் தொடர்வார் என்று அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

கணவர் தொடர் உண்ணாவிரதம் இருக்கும் நிலையில் நானும் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று நளினி சிறைத்துறைக்கு எழுதியுள்ள மனுவில் தெரிவித்துள்ளார். முருகன் உண்ணா விரதத்தை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சிறைத்துறையிடம் மனு அளித்துள்ளார்.

பேரறிவாளன் பரோல் மூலம் சிறையில் இருந்து வெளியே வந்திருக்கும் நிலையில், முருகன் மற்றும் நளினி ஆகியோர் சிறைக்குள் உண்ணாவிரதம் இருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ப)

# மியன்மாரில் மூண்ட கலவரத்தில் வீடுகள் தீக்கிரை; 96 பேர் சாவு!




## 30 பொலிஸ் நிலையங்கள் அடித்து நொறுக்கப்பட்டன!!

யங்கூன்.ஒக.31

மியன்மாரில் கடந்த சில காலமாக ரோகிங்யா இன முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே இருந்து வந்த மோதல் கலவரமாக மாறியுள்ளது.

இந்தக் கலவரத்தில் ஏராளமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டன. கலவரக் காரர்கள் 30 பொலிஸ் நிலையங்களை அடித்து நொறுக்கினர்.

கலவரத்தை அடக்க முற்பட்ட இராணுவத்தினருடனும் மோதல் ஏற்பட்டது. அதனை அடுத்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 96 பேர் பலியாகியுள்ளனர். இது குறித்து வெளியாகியுள்ள தகவல்களின் படி-

மியன்மாரில் வங்காள தேச எல்லையில் ராக்கின் மாகாணம் உள்ளது. இங்கு ரோகிங்யா இன முஸ்லிம்கள் உள்ளனர். இவர்கள் அங்கு அதிகமாக உள்ளனர்.

இவர்களுக்கும் இங்கு அதிகமாக உள்ள பௌத்தர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடந்து வருன்றன. இந்த நிலையில் அங்கு 2 நாள்களாக ஏற்பட்டு வந்த வன்முறை கலவரமாக மாறியது.

இதனால் ரோகிங்யாவினர், ராக்கின் மாகாணத்தில் உள்ள 30 பொலிஸ் நிலையங்களை அடித்து நொறுக்கினர். பல இடங்களில் தீவைப்பு சம்பவங்கள் நடந்தன. இதனால் அங்கு இராணுவம் புகுந்தது.

கலவரக்காரர்களை அடக்க துப்பாக்கிசூடு நடத்தப்பட்டது. கலவரம் மற்றும் துப்பாக்கி சூடு சம்பவங்களில் 96 பேர் பலியாகினர். ஆனால் 104 பேர் இறந்தனர் என ரோகிங்யா பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கலவரம் அதிகரிப்பதைத் தொடர்ந்து மியான்மரில் வாழும் ரோகிங்யா இன மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். அண்டை நாடான வங்காள தேசத்துக்கு குடிபெயர்ந்தும் வருகின்றனர்.

இதுவரை 2 ஆயிரம் பேர் வங்காள தேசத்துக்குள் புகுந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், மியான்மரில் இருந்து ஊடுருவுபவர்களை வங்காள தேச இராணுவம் தடுத்துநிறுத்திவருகிறது. அதற்காக எல்லையில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே வங்காள தேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து 96 பேர் மியான்மருக்குத்திருப்பிஅனுப்பப்பட்டுள்ளனர். (ப)

## 30 ஆண்டுக்கு பின் காஸாவில் சினிமா!

காஸாசிட்டி.ஒக.31

பலஸ்தீனம் காஸவில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக சினிமா படம் திரையிடப்பட்டது.

பலஸ்தீனத்தில் உள்ள காஸா நகரம் கடந்த 30 ஆண்டுகளாக ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு அன்று முதல் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அங்கு சினிமாக் காட்சிகள் திரையிடப்படாமல் நிறுத்தப்பட்டன. காஸா பகுதியில் 20 லட்சம் பொதுமக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் பொழுது போக்கு அம்சங்கள் எதுவும் இன்றி பொழுதைக் கழித்து வந்தனர்.

இந்த நிலையில், அங்கு 30 ஆண்டுகளுக்கு பிறகு முதன் முறையாக சினிமா படம் திரையிடப்பட்டது. அங்குள்ள பழைமை வாய்ந்த சமீர் தியேட்டரில் இது திரையிடப்பட்டது.

அது பொழுதுபோக்கு படம் அல்ல. இஸ்ரேல் சிறைகளில் பலஸ்தீனியர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை வலியுறுத்தும் ஆவணப் படமாகும்.

இருந்தாலும் அந்தப் படத்தைக் காண நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சென்று பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ் – லொறி மோதி விபத்து; கெய்ரோவில் 14 பேர் சாவு!




கெய்ரோ,ஒக. 31

எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவை மத்திய பகுதியான பெனி சூயெப் நகருடன் இணைக்கும் பிரதான சாலையில் நேற்று பஸ்ஸுடன் லொறி மோதி கோர விபத்தில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

எகிப்து நாட்டின் மத்தியப் பகுதியான பெனி சூயெப் நகரை அந்நாட்டின் தலைநகரான கெய்ரோவுடன் இணைக்கும் சாலையில் தனியாருக்குச் சொந்தமான ஒரு சுற்றுலா பஸ் சென்று கொண்டிருந்தது. சாலையின் எதிர்த்திசையில் வேகமாக வந்த லொறி 62 பேருடன் வந்த அந்த பஸ்ஸின் மீது பயங்கரமாக மோதியது.

இதில் நிலைதடுமாறிய பஸ், சாலையின் ஓரத்தில் இருந்த பள்ளத்துக்குள் கவிழ்ந்தது. இந்தக் கோர விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர் எனவும், 32 பயணிகள் காயமடைந்தனர் எனவும் முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

போதுமான பராமரிப்பு இல்லாத வாகனங்கள் மற்றும் படுமோசமான சாலைகளால் எகிப்து நாட்டில் சாலை விபத்துகள் மிக அதிகமாக உள்ளன எனவும், இதனால், ஆண்டுதோறும் சுமார் 12 ஆயிரம் மக்கள் சாலை விபத்துகளில் பலியாகி வருகின்றனர் எனவும் உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## அதிக ஏவுகணைச் சோதனைகளை நடத்துங்கள்; இிராணுவத்தினருக்கு வடகொரிய அதிபர் கட்டளை!

சியோல்.ஒக.31

பசுபிக் பெருங்கடல் பிராந்தியத்தில் இன்னும் அதிகமான ஏவுகணை சோதனைகளை நடத்துமாறு வடகொரிய இராணுவத்தை அதிபர் கிம் ஜாங் உன் கேட்டுக்கொண்டனர் என அந்நாட்டு அரச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

வடகொரியா அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைகளை வீசி பரிசோதித்து வருகிறது. இதற்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

பொருளாதார தடையும் விதித்தன. அதை கண்டு கொள்ளாத வடகொரியா தொடர்ந்து கண்டம் விட்டு, கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. இதனால் அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் போர் மூளும் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, இரு நாள்களுக்கு முன்னர் ஹூவாசோங் -12 என்ற பெயரிடப்பட்டுள்ள மத்தியதூர ஏவுகணையை வடகொரியா செலுத்திய தாகவும், அந்த ஏவுகணை ஹோக்கைடோவின் ஓஷிமா தீபகற்பம், எரிமோ முனை ஆகிய இடங்களை கடந்து தடம் மாறாமல் வடக்கு பசுபிக் கின் இலக்கை துல்லியமாக தாக்கியது எனவும் தெரிவித்துள்ளது

இந்நிலையில், ஜப்பான், தென் கொரியா, ஐ.நா, அமெரிக்கா என யாருடைய குரலையும் கண்டு கொள்ளாமல், பசுபிக் பிராந்தியத்தில் மேலும், ஏவுகணை சோதனைகளை நடத்த வேண்டும் என வடகொரிய இராணுவ விஞ்ஞானிகளிடம் அதிபர் கிம் ஜாங் உன் கேட்டுக்கொண்டார் எனக் கூறப்படுகிறது. (ப)

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆனைவிழுந்தான் பைந்தமிழ் வெற்றி!








கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியங்குளம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் காலஞ்சென்ற மாணவன் நிமால் எடிஷனின் ஓராண்டு நினைவையொட்டி நடத்தப்பட்ட 10 ஓவர்கள் கொண்டமென்பந்துகிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆனைவிழுந்தான் பைந்தமிழ் அணிவெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

மொத்தம் 14 அணிகள் பங்கேற்ற இப்போட்டியில், இறுதிபோட்டிக்கு ஆனைவிழுந்தான் பைந்தமிழ் விளையாட்டுக் கழகமும்,நஞ்சுண்டான் காடு கண்ணகிபுரம் ஒளிநிலாவிளையாட்டுக் கழகமும் தெரிவாகின, கடந்த திங்கட்கிழமை மணி யங்குளம் விளையாட்டு மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் ஆனைவிழுந்தான் பைந்தமிழ் அணிவெற்றியைத்தனதாக்கிக் கொண்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்டவட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் கலந்து கொண்டார்.அவர் உரையாற்றும் போது, போரால் மிகவும் பாதிக்கப்பட்டு, கல்வி,கலைகலாசாரம், விளையாட்டு என்று பல துறைகளிலும் எந்தவித வசதி வாய்ப்புகளும் அற்ற நிலையிலும் கூட தங்களுக்குள் இருக்கும் இந்தத் திறமைகளை தங்களிடம் உள்ள சொற்ப வளங்களைக் கொண்டு தக்க வைத்துக்கொண்டு,தங்களை வளர்த்துவரும் இக் கழகங்களை தாம்.

பெருமையோடு பார்ப்பதாகவும், இவர்கள் மென்மேலும் வளர்ந்து பல சாதனைகளைப் படைக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஸ்கந்தபுரம் மணியங்குளம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை தனது நிதி ஒதிக்கீட்டில் இருந்து யாழ் வடமாகாணசபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம் அவர்கள் வழங்கியிருந்தார்.

(ப)

## வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் 20 — 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி முதற்சுற்று ஆட்டங்கள்

# யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி!

(கங்கா)

துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான பங்களிப்புடன் மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, அதனைத் துரத்தவிடாது எதிரணியைக் கட்டுப்படுத்தி இலகு வெற்றியை பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகஅணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் ஸ்ரார் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முதலில்துடுப்பெடுத்தாடக் கள மிறங்கியது.

ஆரம்பம் முதல் துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் பங்களிப்பை சிறப்பாக வழங்கினர். இதனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் செந்தூரன் 34 ஓட்டங்களையும், தனுஷ்க 30 ஓட்டங்களையும், கபில்ராஜ் 26 ஓட்டங்களையும், கல்கோவன் 25 ஓட்டங்களையும், துவாரகன் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் டிறிபேக் ஸ்ரார் அணி சார்பாக, பிரவீன் 4 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும், சங்கீத் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

195 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டிறிபேக்ஸ்ரார் அணிக்கு, பார்த்தீபன் தனியாளாக மிகப்பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தினார்.

எனினும், அந்தப் போராட்டம் அணியை வெற்றி வரையில் அழைத்துச் செல்லவில்லை. டிறிபேக்ஸ்ரார் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் பார்த்தீபன் 66 ஓட்டங்களையும், லக்சன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, ஜனந்தன் 4 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 19ஓட்டங்களைவிட்டக்கொடுத்து 4 விக்கெட்டுகளையும், லோகன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

# தயாளனின் அதிரடி; வென்றது யூனியன்!

(கங்கா)




தயாளனின் அதிரடி அட்டகாசத்தால், சென்ரல் அணியை நிலைகுலைய வைத்து பெருமையான வெற்றியொன்றை யூனியன் அணி சுவைத்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற முதற்சுற்றுஆட்டமொன்றில் தெல்லிப்பழை யூனியன் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்ரல்அணிமோதியது

நாணயச் சுழற்சியில் வென்ற சென்ரல் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. அதற்கிணங்க களமிறங்கிய யூனியன் அணி, தயாளனின் அதிரடியால் ஓவருக்கு 9 என்ற அடிப்படையில்ஓட்டங்களைச் சேர்த்தது. யூனியன் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தயாளன் 64 ஓட்டங்களையும், ரகுபதி 27 ஓட்டங்களையும், ஜன்சன் 21 ஓட்டங்களையும், ஜன்சன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

# மற்றைய அணிகளிடமிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும் -சங்கக்கார





தற்போது வெற்றிகரமாக அமையாத இலங்கை கிரிக்கெட் அணி குறித்து பலராலும் பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் இலங்கை அணியின்முன்னாள்தலைவர்களில் ஒருவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்காரவும் தற்போதைய தனது தாயக அணி தொடர்பான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டில் ஜாம்பவான்களாகத் திகழும் அனைத்து அணிகளினதும் வரலாற்றை எடுத்துப்பார்க்கும்போது, அனைத்து அணிகளுக்கும் ஒரு மோசமான காலம் காணப்பட்டிருக்கின்றது. அனைத்து நாடுகளும் அந்த மோசமான காலகட்டத்தினை கடந்தே இன்று சாதனை அணிகளாக மாறியுள்ளன.

இப்படியாக சாதித்த அணிகளை இலங்கை முன்னுதாரணமாக எடுக்கும் எனில், மீண்டும் சவால் மிக்க ஓர் அணியாக வலம் வர முடியும் என குமார் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா போன்ற நாடுகள் மோசமான நிலைமை ஒன்றில் காணப்பட்டிருந்த போது சில மாற்றங்களை மேற்கொண்டது. அந்த மாற்றங்கள் அந்நாட்டினை இன்று ஒரு எடுத்துக்காட்டான அணிகளில் ஒன்றாக மாற்றியுள்ளது என்னும் விதத்தில் கருத்து தெரிவித்த சங்கா, இவ்வாறு மேலும் பேசியிருந்தார்.

அவர்கள் (இந்திய அணியினர்), தங்களது கிரிக்கெட்டின் முழுக்கட்டமைப்பிலும் மாற்றங்களை கொண்டு வந்தனர்.

ஆஸ்திரேலிய அணியும் அவ்வாறே, இங்கிலாந்தும் அப்படியே. நாம் ஏன் அவர்களுக்குப் பின்னால் நிற்கின்றோம்? நாம் உதாரணங்களை பார்த்து பழகுபவர்களாயின் நல்ல உதாரணங்களை பார்த்து அவற்றினை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். எனக் குறிப்பிட்டு தற்போதைய இலங்கை அணி, வெற்றிகரமாக செயற்படும் அணிகளிடம் இருந்து பாடம் கற்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்தியிருந்தார்.

திறமைமிக்க வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கு அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அணியினை பலப்படுத்துவதோடு மட்டுமன்றி அவர்களை மிகவும் சிறந்த வீரர்களாக மாற்ற வழிவகைகள் செய்யும் என்றும் சங்கா குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான திறமையான வீரர்களான தினேஷ் சந்திமால் மற்றும் லஹிரு திரிமன்ன ஆகியோர் அணியில் உள்வாங்கப்பட்டு மீண்டும் அவர்களை நிரூபிக்க வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றமை மிகவும் சிறந்த செயல் என்றும் தெரி வித்திருந்தார்.

சந்திமால் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர் என நினைக்கின்றேன். டெஸ்ட் அணித் தலைவரான அவர் தற்போது குழாத்தில் இருப்பதும் மகிழ்ச்சியான விடயம் ஒன்றே. ஒரு நாள் போட்டிகளில் ஆடுவது அவருக்கு அவ்வளவு சிரமமான ஒரு விடயம் இல்லை.

அவரது அண்மைய பதிவுகள் சற்று மோசமாக அமைந்திருக்கலாம். இருப்பினும் இவ்வாறான வீரர்கள் இனம் காணப்படுமிடத்து, நாம் அவர்களுக்கு நிலையான இடமொன்றை வைத்து தொடர்ந்தும் வாய்ப்பளிக்க வேண்டும். திரிமான்னவும் அவ்வாறே. இவ்வாறான வீரர்கள் உயர் தரமான ஆட்டத்தைக் காட்டக் கூடியவர்கள் என சங்கக்கார குறிப்பிட்டிருந்தார்.

இன்னும், இலங்கை அணி சார்பாக ஒரு தொழில்சார் கிரிக்கெட் வீரராக அதிக ஓட்டங்களை குவித்திருக்கும் சங்கக்கார, சமூக வலைத்தளங்களில் ஒன்றான டுவிட்டரில் இலங்கை அணி இந்தியாவுடன் டெஸ்ட் தொடரில் சாதிக்காது போயிருந்தமை பற்றி எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதில் வழங்கியிருந்தார். அதில், இலங்கையின் இளம் வீரர்களுக்கு இத்தொடர் அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கான ஒரு களமாக அமைந்திருந்ததாகவும், இவ்வாறான அதிகமான டெஸ்ட் போட்டிகளில் கிடைக்கும் அனுபவங்கள் எதிர்காலத்தில் சாதிக்க அவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்ற வாறு கூறி, இலங்கை அணி வரும் காலங்களில் நல்ல முடிவுகளை காட்டும் என நம்பிக்கையினையும் வெளியிட்டிருந்தார்.

அனுபவமற்ற இளம் வீரர்களையே தற்போதைய குழாத்தில் கொண்டிருக்கும் இலங்கை அணி மீண்டெழ, உபாதைக்கு உள்ளாகியிருக்கும் சில முக்கிய வீரர்களின் மீள்வருகையும் தேவையாக இருக்கின்றது. காயமடைந்திருக்கும் வேகப்பந்து வீச்சாளர்களான நுவான் பிரதீப் மற்றும் தம்மிக்க பிரசாத், சகலதுறை ஆட்டக்காரர் அசேல குணரத்ன, அதிரடி ஆட்டக்காரர் குசல் பெரேரா ஆகியோர் இல்லாமல் போயிருந்தமை சமீபத்திய காலங்களில் இலங்கை அணிக்கு பெரும் பின்னடைவாக காணப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்னும், இலங்கை அணி தோல்விகளை சந்திக்கும் போது, ரசிகர்கள் மற்றும் வீரர்கள் அடையும் ஏமாற்றம் தனக்குத் தெரியும் என முன்னர் வெளியிட்ட கருத்து ஒன்றில் கூறியிருந்த சங்கா, அவ்வாறான தருணங்களில் அனைவரும் அணிக்கு அதிக ஆதரவும், அன்பும் வழங்கி விடயங்கள் சரியான இடத்தில் வைக்கப்படும்வரை பொறுமை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# 300ஆவது ஒருநாள் போட்டியில் டோனி!

கொழும்பு.ஓக.31

இலங்கையில் சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணியில் இடம் பெற்றிருக்கும் விக்கெட் காப்பாளர் மகேந்திர சிங் டோனி தனது 300 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாட உள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி கடந்த 2004ஆம் ஆண்டில் வங்காளதேசத்திற்கு எதிரான ஒருநாள் போட்டியில் களமிறங்கினார்.

2009ஆம் ஆண்டில் இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட டோனியின், தலைமையில் 2011ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் உலகக்கிண்ணத்தை இந்தியா வென்றது.

மேலும், சர்வதேச தரவரிசைப் பட்டியலிலும் இந்திய அணி பலமுறை முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்நிலையில், இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து வரும் இந்திய அணியில் இடம் பெற்றுள்ள டோனி, இன்று தனது 300ஆவது ஒருநாள் போட்டியில் விளையாட உள்ளார்.



இந்த சுற்றுப்பயணத்தின் கடைசி இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் இந்திய அணியின் வெற்றிக்கு உறுதுணையாக டோனி நின்றார். 2019 உலகக்கோப்பை அணியில் இடம்பெறுவதை கணக்கில் கொண்டு டோனி தனது பழைய ஆட்டத்தை மீண்டும் கொண்டு வந்துள்ளார் என விளையாட்டு நோக்கர்கள் கருதுகின்றனர்.

# இலங்கை அணியை மீட்கும் வழி எமக்குத் தெரியும் என்கிறார் திலங்க

இலங்கைக் கிரிக்கெட் அணியை மீட்டெடுக்கும் வல்லமை எம்மிடம் இருக்கின்றது என்றும் அதற்கான வழியும் எமக்குத் தெரியும் என்றும் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத் தலைவர் பதவியிலிருந்து தான் ஒருபோதும் விலகத் தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணி மோசமான தோல்விகளை சந்தித்து வருவதால் இலங்கை அணியை மீட்டெடுக்க வேண்டுமானால் தற்போதைய இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால உட்பட கிரிக்கெட் சபை பதவி விலக வேண்டும் என்று முன்னாள் அணித் தலைவரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அர்ஜுன ரணதுங்கவின் இந்தக் கூற்றுக்கு பதிலளிக்கும் வகையில் பி.பி.சி. சர்வதேச செய்திச் சேவைக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் குறிப்பிடுகையில், உடனடியாக பிரதிபலன் இல்லாததால் பதவி விலகவேண்டும் என்றா அவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்று கேள்வி எழுப்பியுள்ள திலங்க சுமதிபால, நீண்டகால திட்டத்துடன் நாம் வேலை செய்துகொண்டிருக்கிறோம்.

அதற்கான திட்டத்தை வகுத்து அதற்கமையவே நாம் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்த பலனை நாம் அடைவதற்கு குறைந்தது நான்கு ஆண்டுகள் செல்லலாம்.

ஆனால், நாம் நிச்சயம் அதன்மூலம் நீண்டகால பலனை அடைவோம் என்றும் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்அழைப்பின் பேரில் அவரது கொழும்பு விஜேராம மாவத்தை இல்லத்தில் அவரை நேற்று முன்தினம் மாலையில் நேரில் சென்று சந்தித்தார் இரா.சம்பந்தன்.

வேறு உதவியாளர்கள் எவருமின்றி மூடிய அறையில் இருவரும் சுமார் 45 நிமிட நேரம் உரையாடினர் என்று அறிய வந்தது.

உரையாடலின் முடிவின் போது திருமதி ஷிராந்தி ராஜபக்ஷவும் வந்து சந்திப்பில் கலந்து கொண்டு சம்பந்தனிடம் குசலம் விசாரித்து அவருடன் சற்று நேரம் உரையாடினார் எனவும் அறிய வந்தது.

சந்திப்புக் குறித்து எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

இது நல்ல சந்திப்பு. பரஸ்பரம் கருத்துப் பரிமாறினோம்.

அவரது அழைப்பின் பேரில் இது நிகழ்ந்தது. அண்மைக் காலமாக இதற்கான ஏற்பாடுகள் இருந்தன. இப்போதுதான் சந்திப்பு சாத்தியமாயிற்று. பல விடயங்கள் குறித்துப் பேசினோம்.

தற்போதைய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் குறித்து நான் எடுத்துரைத்தேன்.

ஒருமித்த நாட்டுக்குள் – பிரிக்கப்பட முடியாத ஒரு நாட்டுக்குள் – நாம் ஐக்கியமாக வாழ்வதற்கான அரசியல் தீர்வு ஒன்றை உறுதிப்படுத்துவதே இந்தப் புதிய அரசமைப்பின் நோக்கமாகும்.

அதில் அனைத்து மக்களினதும் பங்களிப்பு அவசியம். எல்லா மக்களினதும் பங்களிப்போடு அரசியல் தீர்வையும் உள்ளடக்கிய– ஓர் அரசமைப்பை உருவாக்குவோம் என்றால்தான் அது நின்று, நிலைத்து, நீடிக்க முடியும்.

இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட அரசமைப்பு எதுவும் இந்த நாட்டின் அனைத்து மக்களினாலும் உருவாக்கப்பட்டவையல்ல.

ஆகவே, அனைத்து மக்களினதும் பங்களிப்போடு – இணக்கமான ஓர் அரசமைப்பை உருவாக்கும் இந்த முயற்சியில் சிறுபான்மை இனத்தவரான – தமிழர்களாகிய – நாங்கள் முழு அளவில் பங்களிப்பதற்கு முன் வந்திருக்கின்றோம்.

இந்த வாய்ப்பை சரிவரப் பயன்படுத்தி, சகலரினதும் பங்களிப்போடு – இணக்கமான ஓர் அரசமைப்பை உருவாக்கும் இந்த முயற்சியில் சிறுபான்மை இனத்தவரான – தமிழர்களாகிய – நாங்கள் முழுஅளவில் பங்களிப்பதற்கு முன் வந்திருக்கின்றோம்.

இந்த வாய்ப்பை சரிவரப் பயன்படுத்தி, சகலரினதும் பங்களிப்போடு கூடிய ஓர் அரசமைப்பை உருவாக்குவதில் நாட்டின் தேசியத் தலைவர்களுள் ஒருவர் என்ற முறையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ள பொறுப்பை – கடமையை – பங்களிப்பு அவசியத்தை – நான் அவருக்கு எடுத்துரைத்தேன். அவர் ஒப்புக் கொண்டார்.

எனினும் அவருக்கும் அரசியல் ரீதியாக சில, பல பிரச்சினைகள், சங்கடங்கள் உள்ளன. அவரது தரப்பிலும் சில கருத்து நிலைப்பாடுகள் உண்டு. அவை பற்றி அவர் விளக்கினார்.

அந்தச் சந்தேகங்கள், பின்னடைவுகள், நெருக்கடிகளைத் தாண்டி, இந்தப் புதிய அரசமைப்பு விவகாரத்தை நகர்த்தும் தந்திரோபாயம் குறித்து ஆரம்ப நிலைப் பேச்சுக்களை நடத்தியுள்ளோம்.

இது மேலும் தொடரும். அடுத்த மட்டத் தலைவர்கள் மத்தியில் அடுத்தக் கட்டப் பேச்சுக்களை நகர்த்தக்கூடியதாக இருக்கும் எனக் கருதுகின்றேன். – என்றார் சம்பந்தன். (உ)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

கட்சிகள் தனித்து அரசு அமைப்பது மற்றும் 2020 வரை தற்போதைய அரசு தொடருமா என்பன குறித்து அங்கு கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்படி விடயத்தைக் கூறினார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சியுமே தனித்து ஆட்சி அமைக்க முடியாது. நாம் தற்போது அமைத்துள்ள தேசிய அரசு என்ற கூட்டமைப்பே சாத்தியமானது. இந்த அரசு 2020 வரைத் தொடரும். அதில் எமக்கு நம்பிக்கை உண்டு. யாரும் அது குறித்து சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. – என்றார் ஜனாதிபதி.

கூட்டு அரசாங்கமே மோசமான நிலையிலிருந்த நாட்டையும் மக்களையும் மீட்டு, நாடு முகம் கொடுத்த பல்வேறு சவால்களை வெற்றிகொண்டதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டுக்கும், மக்களுக்குமான பணியை ஆற்றுவதற்காக கூட்டரசாங்கத்தின் பயணத்தைப் பலப்படுத்துவதற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தூய்மையான, பலமான அரசியல் இயக்கமாகக் கட்டியெழுப்புவதற்கும் தாம் பாடுபடுகிறார் எனத் தெரிவித்தார்.

அமைச்சர் மங்கள சமரவீர, பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (உ)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலையில் சந்திக்கின்றனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு பங்காளிக் கட்சிகளினதும் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. (உ)

## யாழ்.நகரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலரைக் கடித்திருப்பதால் இதனால் பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி பெற்றோல் நிலையப் பகுதியில் தொடங்கி, மானிப்பாய் வீதியில் ஒட்டுமடம் வரையான பகுதியிலேயே இந்த நாய் தனது 'வாய்' வரிசையைக் காட்டியிருக்கின்றது.

இன்னமும் அந்த நாய் மடக்கப்பட்டதான செய்தி ஏதும் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை.

இந்த நாயால் கடிபட்டவர்கள் யாரேனும் ஆஸ்பத்திரியில் சரியான சிகிச்சை பெறத் தவறியிருந்தால் உடனடியாக ஆஸ்பத்திரியுடன் தொடர்புகொண்டு பாதுகாப்பு முற்சிகிச்சைகளைச் செய்துகொள்ளும்படியும் கோரப்பட்டுள்ளது. (உ)

# இலங்கையில் எந்தவொரு நாட்டுக்கும் விசேட சலுகை வழங்கப்படவில்லை

### அனைத்து நாடுகளுக்கும் சம அந்தஸ்து என்கிறார் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஓக.31

இலங்கையில் எந்தவொரு நாட்டுக்கும் விசேட சலுகை வழங்கப்படவில்லை எனவும் எமது நாட்டில், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களில் அனைத்து நாடுகளுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமெரிக்கா, இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு மாத்திரம் உயர்ந்த அந்தஸ்தை நாங்கள் வழங்கப் போவதில்லை எனவும் அவர் உறுதிபடக் கூறியுள்ளார்.

'சமாதானம், சகவாழ்வு, வளர்ச்சி' எனும் தொனிப்பொருளில் இன்று ஆரம்பமாகவுள்ள இந்தியப் பெருங்கடல் வலய நாடுகளின் மாநாடு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு பிரதமரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் கருத்தரங்கில் இந்தியப் பெருங்கடல் வலய நாடுகளின் சமாதானத்தை ஸ்திரப்படுத்தல், கூட்டு பாதுகாப்புப் பொறுப்பு மற்றும் இந்தியப் பெருங்கடலில் இடம்பெறும் கப்பல் போக்குவரத்து வர்த்தகத்தில் இவ்வாறு குறித்த நாடுகள் பிரதிபலனைப் பெற்றுக் கொள்ளும் மூலோபாயங்கள் போன்ற விடயங்கள் குறித்து தீர்க்கமாக ஆராயப்படவுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட 150 இற்கும் அதிகமான சர்வதேச பிரமுகர்களும், 150 இற்கும் அதிகமான இலங்கைப் பிரமுகர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். – என்றார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு 99 வருட காலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் கூட்டு கடற்படை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த நாடுகளுக்கு மட்டும் இலங்கையில் விசேட சலுகை வழங்கப்பட்டுள்ளதா? என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த திலக் மாரப்பன,

எந்தவொரு நாட்டுக்கும் இலங்கையில் விசேட சலுகை வழங்கப்படவில்லை. அமெரிக்கா, ஜப்பான், சீனா, இந்தியாவுக்கு வர்த்தக சுதந்திரம் உள்ளது போன்று ஏனைய நாடுகளுக்கும் சுதந்திரம் உள்ளது.

நண்பர்கள் என்று சொல்வதற்கு எல்லோரும் உள்ளனர். இருள் படிந்த உறவு எமக்கு தற்போது உலகில் இல்லை. – என்றார்.

இங்கு உரையாற்றிய சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க –

இந்தியப் பெருங்கடல் வலயத்தை அண்டிய நாடுகளின் மாநாடு இரண்டாவது தடவையாக இடம்பெறுகிறது. கடந்த வருடம் சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

இந்தியப் பெருங்கடல் வலயத்தின் நாடுகள் மாத்திரமல்ல, உலக நாடுகளின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தியப் பெருங்கடலின் பொருளாதாரம் சர்வதேச நாடுகளையும் மையப்படுத்தியுள்ளதால் அதன் தாக்கம் அனைவருக்கும் ஏற்படக் கூடியது.

அதனடிப்படையில் வர்த்தகம், பொருளாதார அபிவிருத்தி, இந்தியப் பெருங்கடல் நாடுகளில் தேசிய பாதுகாப்பு, சமாதானம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

அத்துடன், போதைப்பொருள் இடம் மாற்றத்தில் முக்கிய கேந்திர நிலையமாக இலங்கை அண்மைய காலம் பயன்படுத்தப்படுகிறது. இம்முறை இலங்கையின் முக்கிய வாதம் போதைப்பொருள் குறித்ததாக அமையும். – என்றார். (ம)

## உள்நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வழக்கு ஒன்று தென்னாபிரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஒன்றினால் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

அந்த வழக்குக் குறித்துக் கருத்துக் கேட்டபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொறுப்புக் கூறல் விடயத்தில் உள்நாட்டில் நீதி, நியாயம் கிடைக்கும் என்பதில் மக்கள் முற்றாக நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டார்கள். அதன் ஒரு வெளிப்பாடாகவே பிரேஸிலில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நோக்க வேண்டும்.

பொறுப்புக் கூறல் பொறிமுறையை ஒழுங்குபடுத்துவதற்காகவே முதலில் காணாமற்போனோர் விடயத்தைக் கையாளுவதற்கான அலுவலகத்தை அமைக்கும் சட்டமூலத்தை நிறைவேற்றச் செய்தோம். ஆனால் ஒரு வருடம் கடந்தும் எதுவும் நடக்கவில்லை.

பொறுப்புக் கூறும் விவகாரம் இந்த நாட்டில் நீதி, நேர்மையாக முன்னெடுக்கப்படும் என்பது இந்த நல்லாட்சி அரசு வந்தும் நம்பிக்கையானதாக அமையவில்லை.

எனவே, வாய்ப்புக் கிடைத்த வெளிநாடுகளில் நீதியைத் தேடுவதைத் தவிர எமது மக்களுக்கு வேறு வழியே இல்லை. அதையே அவர்கள் செய்ய முற்படுகின்றார்கள் என நான் நினைக்கின்றேன். – என்றார் சுமந்திரன் எம்.பி. (உ)

## இலங்கை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டித்தாம் நேற்று விடுத்த செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம். வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல தடவைகள் நாங்கள் எழுத்து மூலமும் வாய் மூலமும் அரசாங்கத்தை எம்முடைய காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தும் இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவர்கள் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதாக சர்வதேச நாடுகளுக்கு அரசாங்கம் கூறியும் நடைமுறையில் எந்த ஒரு நடவடிக்கையும் செயற்படுத்தப்படவில்லை.

இதனால், எமது அரசாங்கத்துக்கு மேலதிகமாக இருவருட காலக்கெடு வழங்கிய சர்வதேச நாடுகளை எங்களுடைய காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமாகப் போதிய நெருக்குதல்களை அரசாங்கத்துக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம்.

எங்கள் அனைவரதும் போராட்டத்தில் நாங்களும் உங்களுடன் இருக்கின்றோம். என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். – என்று உள்ளது. (உ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் வீசப்பட்டும் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் காணப்பட்டன.

இது குறித்து வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து, பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இரண்டு விடயங்களை முன்வைத்து இந்தத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஒன்றில், "தமிழீழத்தில் ஒரு பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. மீறி தவறிழைக்கும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இரண்டு வார காலம் அவகாசம் வழங்கப்படுவதாக" தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றைய துண்டுப்பிரசுரத்தில், 'வவுனியாவுக்கான முக்கிய அறிவித்தல்!' என்ற தலையங்கத்தில், 'தமிழீழத்திற்காக உயிரிழந்தவர்கள் கண்ட கனவுகள் உண்மையாகும் நேரம் வந்து விட்டது. இன்னும் நாங்கள் முற்றாக அழிந்து விடவில்லை.' என்பன போன்ற பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## முதல்வருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மிடமிருந்த அமைச்சுக்களைப் பகிர்ந்து இப்போது பதவி வகிக்கும் முதல்வர், அமைச்சர்கள் அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோர் அந்தத்துறைகளுக்குரிய அமைச்சர்களாகச் செயற்படுகின்றமைக்கு இடைக் காலத் தடை விதிக்கும்படியும் அவர் இந்த மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனுவில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், அமைச்சர்களான க.சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன், சிவநேசன், குணசீலன், முன்னாள் அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் மற்றும் ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவின் வழிகாட்டலில் சட்டத்தரணி லிலாந்தி டி சில்வா இந்த மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு இன்று அல்லது திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படும் முன்னாள் போராளிகள்: பிரித்தானிய தூதுவரிடம் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு !





கொழும்பு, ஓக. 31

முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுவதுடன், அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ்டோரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்திருந்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு அவர்களுக்கு சரியான நீதி வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், யுத்தம் நிறைவு பெற்று நல்லாட்சியில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் இதுவரை விடுவிக்கப்படாதிருக்கின்றன. இதனால் அந்த மக்கள் அகதிகளாக வாழ்கின்றார்கள்.

இரணைதீவில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த மக்களை அங்கு வாழ விடாது, அவர்களை தொழில் செய்ய விடாது அந்தத் தீவை கடற்படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றார்கள்.

இதேபோல், பெருமளவான வளங்கள் இன்றும் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. எனவே, இவை விடுவிக்கப்பட வேண்டும்.

மேலும், நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று எங்களுடைய மக்கள் யாரும் கேட்கவில்லை.

அத்துடன், இந்த அரசு பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுப்பதில் இனரீதியான குரோதத்தை ஏற்படுத்துவதாக மக்கள் கருதுகின்றார்கள்.

முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுகின்றார்கள். அச்சுறுத்தப்படுகின்றார்கள், இவையெல்லாம் ஒரு நல்லிணக்கத்திற்கான அறிகுறியென தெரியவில்லை.

காணாமற் போனவர்களைக் கண்டறியவும் அவர்களின் உறவினர்களுக்கு நீதி கிடைக்கவும், நிலங்களை விடுவிப்பதற்கும் பிரிட்டிஷ் அரசு இலங்கையின் மீது அழுத்தங்களைக்கொடுக்கவேண்டுமென மக்கள் விரும்புகின்றார்கள்.

அத்துடன், தொடர்ந்தும் வெடிபொருள்களை அகற்றி மக்கள் மீள்குடியேறுவதற்கு மேலும் உதவ வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பிரித்தானிய தூதுவர் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2004ஆம் ஆண்டில் இப்பகுதியில் தான் கடமையாற்றி இருந்தேன். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு பிரிட்டன் தொடர்ந்தும் உதவும் எனக் கூறினார்.

அத்துடன், 2020ஆம் ஆண்டளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதேவேளை,இலங்கையில் வாழ்கின்ற மூவின மக்களும் சம அந்தஸ்துடன் வாழ்கின்ற உரிமையை இலங்கை அரசு வழங்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

## நல்லாட்சியிலிருந்து யார் வேண்டுமானாலும் விலகிச் செல்லலாம் என்கிறார் மைத்திரி



நல்லாட்சியிலிருந்து யார் வேண்டுமானாலும்விலகிச்செல்லலாம் யார் வேண்டுமானாலும் இணைந்து கொள்ள முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த நல்லாட்சி எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக ஆசிரியர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய கணக்காய்வு சட்டம் கால தாமதமாகியுள்ளமை தொடர்பில் நான் வருத்தமடைகிறேன். தேசிய கணக்காய்வு சட்டத்தை அமுல்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு அமையவே ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

### ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 31

புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு அமையவே முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவிற்கு எதிராக யுத்தக் குற்றச் செயல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக, தென்னமரிக்க மனித உரிமை குழு பிரேசிலில் யுத்தக் குற்றச் செயல் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே கமால் குண ரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு அமையவே யுத்தக் குற்றச் செயல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. பொய் வழக்கு தொடரப்பட்டுள்ளது என கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

## கடற்படை தளபதி - பாதுகாப்பு செயலாளர் சந்திப்பு!

புதிய கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னய்யா பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்திய ரத்னவை சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பாதுகாப்பு செயலாளர் இலங்கைகடற்படையின் 21 ஆவது கடற்படைத் தளபதியாக கடமையேற்றுள்ள வைஸ் அட்மிரல் ட்ரவிஸ்சின்னய்யாவிற்கு முதலில் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# ரோஹித்த வெளிநாடு செல்வதற்கு கொழும்பு உயர் நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஓக. 31

கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன வெளிநாட்டு பயணம் மேற்கொள்வதற்கு கொழும்பு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன நேற்று முன்தினம் இந்த அனுமதியை வழங்கியிருந்தார்.

தனது வருமானத்தால் ஈட்டப்பட முடியாத 412 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை ரோஹித்த அபேகுணவர்தன ஈட்டியமை குறித்து விளக்கம் அளிக்குமாறு கோரி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளின் போது ரோஹித்தவின் கடவுச்சீட்டை நீதிமன்றம் முடக்கியிருந்தது.

இந்தநிலையில், வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள அனுமதியளிக்குமாறு ரோஹித்த தனது சட்டத்தரணி ஊடாக விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, நீதிமன்றின் வசமிருந்த கடவுச்சீட்டை தற்காலிக அடிப்படையில் விடுவிக்குமாறு நீதிபதி சம்பத் விஜேரத்ன உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வரையில் ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச் செல்ல ரோஹித்த அனுமதி கோரியிருந்தார்.

வெளிநாட்டு கடவுச்சீட்டை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி மீளவும் நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடையைத் தற்காலிக அடிப்படையில் நீக்குமாறு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் மற்றும் குற்ற விசாரணைப் பிரிவு பணிப்பாளர் ஆகியோருக்கு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் 2006ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வருமானத்தினால் ஈட்ட முடியாத 412 லட்சம் ரூபா சொத்துக்கள் மற்றும் பணத்தை ரோஹித்த அபே குணவர்தன ஈட்டினார் எனக் குற்றம்



சுமத்தி லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவினர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.


# இலங்கை - இந்திய இன்றைய ஆட்டம் ஆயிரம் பொலிஸார் மைதானத்தில்!

இன்று நடைபெறவுள்ள இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவது சர்வதேச ஒருநாள் போட்டியின் போது விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டியின் போது 1,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 3 போட்டிகள் நிறைவடைந்த நிலையில் 3 போட்டிகளிலும் இலங்கை அணி தோல்வியைத் தழுவியிருந்தது. கடந்த மூன்றாவது போட்டியின் போது ரசிகர்கள் போத்தல் மற்றும் ஏனைய பொருள்களால் மைதானத்தில் இருந்த இலங்கை அணி வீரர்களைத் தாக்க முயற்சி செய்தனர். இதனால் போட்டி அரைமணி நேரம் இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே, இன்று இடம்பெறவுள்ள நான்காவது போட்டியின் போது விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




## தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின்

# டாக்டர் பட்டத்தைப் பெறுகிறார் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள்



யாழ்ப்பாணம்,ஓகஸ்.31

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு ஆச்சிரமத்தின் மோனகதாஸ் சுவாமிகளுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற உள்ளது.

தமிழ்நாடு மத்திய பல் கலைக்கழகம் சுவாமிகளுக்கு வழங்கியுள்ள கௌரவ டாக்டர் பட்டம் அங்கு வழங்கப்படும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

விருதை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் வழங்கி சிறப்புரை ஆற்றுவார்.

யாழ். பல்கலைக்கழகத் தின் பேராசிரியர் கந்தையா தேவராசாவும் சிறப்புரை வழங்குவார்.

தலைமை உரையை கொழும்பு தலைமையக தொழில் நுட்ப கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் நா.யோகராஜா நிகழ்த்துவார். (அ)







சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகத்தின் 4ஆவது பதவியேற்பு வைபவம் கடந்த 26ஆம் திகதி யாழ் றில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் றோட்டறி மாவட்ட ஆளுநர் Rtn.PDG.அமிர்தகௌரி ராஜன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

புதிய தலைவர் Rtn.PHF. நிமலசனுக்கு சின்னம் சூட்டப்படுகின்றமையையும், 2017/2018 ஆம் ஆண்டுக்குரிய இயக்குநர் குழுவினையும் காணலாம்.

# யாழ்.செயலகத்தில் நேற்று மதத் தலைவர்கள் மாநாடு



நாட்டில் நிலவும் சமாதானச் சூழல் மற்றும் சமய ரீதியிலான சகவாழ்வு' எனும் தொனிப்பொருளில் சர்வமத குழுவின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அஸ்கிரியபீட மகாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரர், நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயாமிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி ஜெபநேசன் அடிகளார், மௌலவி ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆகியோர் உள்ளிட்ட பல மதப் பெரியார்களும், வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.







யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வண. வராகொட சிறீ ஞானரத்ன மகாநாயக்க தேரர் நேற்று முன்தினம் புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனின் கிராமமான கந்தரோடையில் அமைந்துள்ள தொல்பியல் மையத்திற்கு நேற்று சென்றிருந்தார்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வண. வராகொட சிறீ ஞானரத்ன மகாநாயக்க தேரர் மற்றும் வடமாகாண கட்டளைத்தளபதி மேஜர்ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி ஆகியோருக்கிடையிலான சந்திப்பும் இடம்பெற்றன. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# அஸ்வரின் ஜனாஸா நேற்று நல்லடக்கம்



கொழும்பு,ஓகஸ்.31

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்று முன்தினம் காலமாகிய நிலையில் நேற்று பல அரசியல் பிரமுகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அவரது இல்லத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். அவரது குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவிக்கும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் அங்கு விஜயம் செய்தார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மனோ கணேசன், நிமல் சிறிபால டி. சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற அலுவலர்கள் நேற்று முற்பகல் அவரது இல்லத்துக்கு வருகை தந்திருந்தனர்.

அஸ்வரின் ஜனாஸா நேற்று மாலை தெஹிவளை பெரிய பள்ளி வாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (உ)

# கித்சிறி அத்தநாயக்கவின் பூதவுடலுக்கு ரணில், மஹிந்த அஞ்சலி செலுத்தினர்!





கொழும்பு,ஓகஸ்.31

ஊவா மாகாண சபையின் உறுப்பினரும், அந்த மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான கித்சிறி செனரத் பண்டார அத்தநாயக்க நேற்று முன்தினம் காலமானார்.

நோய் காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவர் காலமாகியுள்ளார்.

51வயதுடைய இவர், விவசாயம், காணி மற்றும் நீர்ப்பாசன மாகாண அமைச்சராகச் செயற்பட்டுள்ளார்.

இவருடைய பூதவுடலுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேரில் சென்று மரியாதை செலுத்தியுள்ளனர்.

இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது முகப்புத்தகத்தில் பகிர்ந்துள்ளார்.

இதேவேளை, குமார வெல்கம மற்றும் மஹிந்த ஆதரவு அணியினரும் கித்சிறி செனரத் பண்டார அத்தநாயக்கவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது.